உ

கணபதி துணை.

யாழ்ப்பாணத்து அராலி

சந். இராமலிங்கமுனிவர்

இயற்றிய

சந்தானதீபிகை மூலமும்,

கோக்குவில்

சு. நடராசையர்

இயற்றிய

பொழிப்புரையும்.

ச. இ. சிவராமலிங்கையரால்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

சார்வரி௵ தைமீ.

சாத்துகவி.

ஊர்காவற்றுறைக்கோட்டு நீதிபதி
ஸ்ரீமாந். கு. கதிரைவேற்பிள்ளையவர்கள்
சொல்லியது.

கட்டளைக்கலித்துறை.

சந்தான தீபிகை தன்றுல ராமலிங் கையன்றர
ஐந்தான மாம்பய ஞய்ந்த நடராச வையனுரை
தந்தா தரித்தனன் சோதிடம் வல்ல தமிழறிஞன்
சிந்தா மணியிந்த டீகை யெனக்கொண்டு தேறுகவே.

சுன்னுகம்
ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர்
சொல்லியது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சோதிடந்தேர் பரம்பரையோன் சம்பு கேசன்
றுணையடிப்பூ சகனெருவன் மரபில் வந்தோன்
சாதுகுண ராமலிங்க முனிவன் றந்த
சந்தான தீபிகைக்கோ ருரைதந் தானுற்
கோதறுமம் முனிவன்வழித் தோன்ற லாகிக்
குலவியசுப் பிரமணிய குரவன் மைந்தன்
வேதியர்கோன் நடராஜ நாம தேயன்
வித்தைபல கற்றுணர்ந்த மேலோன் றுனே.

உ

கணபதிதுணை.

சிறப்புப்பாயிரம்.

நன்னூலாம் வடமொழிச்சந் தானதீ
பிகையதனை நலங் குலாவு
தென்னூலா யெவர்தாமு மாராய்ந்து
கொண்டாடத் தெரித்தல் செய்தான்
மின்னூலா மிடைவாணி மெய்யருடா
னெஞ்சகத்துப் பூத்து மேவு
முன்னூலான் சந்திரசே கரன்புதல்வ
னிராமலிங்க முனிவன் முனே.

(இ-ள்.) மின் நூல் ஆம் இடை வாணி மெய் அருள் நெஞ்சகத்து பூத்து மேவும் மு நூலான் சந்திரசேகரன் புதல்வன் இராமலிங்கமுனிவன் - மின்னுக்கொடிபோலும் இடையையுடைய சரசுவதியினது மெய்மையாகிய திருவருள் தமது மனதினுள் விரிந்திருக்கப்பெற்ற முப்புரிநூலணிந்த சந்திரசேகரையருடைய பிரதமபுத்திரராகிய இராமலிங்கமுனிவர்,—நன்னூல் ஆம் வடமொழிச் சந்தான தீபிகையை - நல்ல நூலாகிய வடமொழிக்கணுள்ள சந்தானதீபிகையை,— எவர்தாமும் ஆராய்ந்து கொண்டாட - தமிழ்மொழிப் பயிற்சியுடையார் யாவரும் ஆராய்ந்து கொண்டாடும்படி,— நலம் குலாவு தென் நூலாய் தெரித்தல் செய்தான் - நலம்விளங்குகின்ற தமிழ்நூலாய் (மொழிபெயர்த்து) விளக்கினர். எ-று.

"மின்னூலாம்" என்றதற்கு மின்னும் நாலும் போலும் என்று பொருளுரைப்பினு மமையும். முந்நூல் எதுகைநோக்கி முன்னூல் என்று விகாரமாயிற்று. இது, இந்நூலாசிரியருடைய கனிட்டரும் மாணாக்கருமாகிய வெங்கடேசசாஸ்திரிகள் செய்தது.

இந்நூலாசிரியராகிய இராமலிங்கமுனிவர், சம்புகேசுவர அர்ச்சகருளொருவராயிருந்து ஆதியில் இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள வட்டுக்கோட்டையைச் சார்ந்த அராலியில் வந்து குடியேறிய ஆதிசைவப் பிராமணகுலதிலகராகிய ஒருவருடைய சந்ததியில் அவதரித்த சந்திரசேகரையருக்குச் சாலிவாகன சகாப்தம் கருஎ௦ - தின் மேனிகழ்ந்த விரோதிவருஷத்தில் பிரதமபுத்திரராகப் பிறந்து, சிறுபருவத்திலேயே வடமொழி தென்மொழியிரண்டினும் வல்லராய், வேதாகமேதிகாச

புராணுதிகளிலும் வேதபுருஷனுக்கு நேத்திராங்கமாயுள்ள ஜோதிஷ சாஸ்திரத்திலும் அதிபாண்டித்தியமடைந்து விளங்கி, ௧அ௫௬ - தின் மேனிகழ்ந்த பிலவங்க௵ வைகாசிமீ ௧அ௨ வியாழக்கிழமை முற்பகல் ௧௩ - அடியளவில் திருதியையும் புனர்பூசநக்ஷத்திரமுங் கூடிய சுபமுகூர்த்தத்தில் ஆரியபடசித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு வாருசிமுனிவர் அருளிச்செய்த வாக்கியவிதிப்படி இவ்விலங்கையில் முதன்முதற் பஞ்சாங்கங் கணித்து வெளிப்படுத்த ஆரம்பித்தார். அப்பொழுது அவருக்கு வயசு ௩அ. இப்பஞ்சாங்கம் அக்காலந்தொடங்கிப் பாரம்பரியமாய் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது. பின்பு அவர் தமது ௩அ-ம் வயசாகிய ௧௯0௧ - தின்மேனிகழ்ந்த பிரபவ௵ பழமொழி எழுதத்தொடங்கி எழுதிவந்தார். அதன்பின்பு தமது ௬௩-ம் வயசாகிய ௧௯௩௭ - இன் மேனிகழ்ந்த நந்தன௵ தைமீ ௩௨ குருவாரமும், பூசநக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் இல்லறத்தோர்க்கின்றியமையாச் சாதனமாகிய சந்தானபலனை இனிதுவிளக்கும் வடமொழிச் சந்தானதீபிகையைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினார். இவர் பாடிய இத்தமிழ்ச்சந்தானதீபிகை யாழ்ப்பாணத்திலுள்ள சோதிடர்கள் பலரிடத்திலும் ஏட்டுப்பிரதியாக உள்ளது. இந்நூலாசிரியருடைய முன்னும் பின்னுமுள்ள சந்ததியாருட் பலர் இந்தியாவில் தங்கள் பந்துக்களைப் போய்க்கண்டுவரும் வழக்கம் அக்காலத்திலுண்டு; அதனால் இந்நூல் அங்குஞ்சென்று பிரசித்திபெறலாயிற்று. அது காலாந்தரத்திலியல்பாகவே கரலிகிதத்தாலாய வழுக்கணிறைந்து பயன்படாதிருத்தலைக்கண்டு "யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிடபரிபாலனமட" த்தாருடைய கேள்விப்படி, ஆசிரியருடைய சந்ததியினராய் வடமொழி, தென்மொழி, டச்மொழி என்னு மூன்றுமொழியினும் வல்லராய், மூவரம்மானை, திருநல்லைக் கிள்ளைவிடுதூது, வண்ணைக்குறவஞ்சி முதலிய சில பிரபந்தங்களும், நித்தியகன்மவிதி, சிவபூசாவிதி முதலிய சமயாசார நூல்களும், உரைகளுஞ் செய்து சிவபூசாதுரந்தரராய் மிகப் பிரசித்திபெற்று விளங்கிய சந்திரசேகர சாஸ்திரிகளுக்குப் பிரபௌத்திரனாகிய நான் பல பிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து அதற்கொரு பொழிப்புரையும் எழுதினேன். இவ்வுரையில் எவ்விடத்திலேனும் பிழைகள் காணப்படின் சோதிஷவியுற்பத்திமான்கள் அப்பிழைகள் இன்ன பக்கத்தில் இன்ன செய்யுளுரையில் உள்ளன அவை இன்னபடியிருத்தல்வேண்டும் என்று பிரபல பிரமாணத்தோடு எனக்கு அறிவிப்பாராயின் விருப்போடும் அவற்றை மற்றைப்பதிப்பிற்றிருத்திவிடுவேன்.

கொக்குவில்:
சார்வரி௵ தைமீ.

இங்ஙனம்,
சு. நடராசையர்.

உ

கணபதிதுணை.

சந்தானதீபிகை

மூலமும் உரையும்.

பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

கடலான கலைஞான தேசிகனைக் கயமுகனைக் குகனைக் கான்சூழ்
மடலார்தண் பூவினிலு நாவினிலும் வதிந்தருளும் வாணி மானை
யடலாரு மொன்பதுகோ ளாகியவா னவர்கடம்மை யடிய னேன்ற
னிடரான தறத்துரப்பீ ரருள்சுரப்பீர் புரப்பீரென் றிறைஞ்சு வேனே.

(இதன்பொருள்.) கடல்போலக் கரைகாண்டற்கரியனவாய் ஆழ்ந்து விரிந்த கலைக்கியானங்களையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த எனதாசிரியரையும், யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளையும், முருகக்கடவுளையும், நறுமணஞ்சூழ்ந்த இதழ்கணிறைந்த குளிர்ச்சியாகிய வெண்டாமரைப்பூவின்மேலும் எனது நாவின்கண்ணும் வீற்றிருந்தருளுங் கலைமகளையும், பழவினைகாரணமாக உயிர்களனுகரற்கமைந்த சுகதுக்கங்களை அவ்வக்காலத்திற்றவறாது அவ்வுயிர்களையடைவித்தற்கு ஈசுவரனிடத்துப் பெற்றுக்கொண்ட வலிமைநிறைந்த சூரியன் முதலிய நவக்கிரகங்களாகிய தேவர்களையும் இந்நூல்செய்யுமிடத்து அடியேனுக்குளவாகும் இடையூறுகளை முற்றக்கடிந்தருளுங்கள்! கிருபைபாலித்தருளுங்கள்! அடியேனை இரக்ஷித்தருளுங்கள்! என்று பிரார்த்தித்து நமஸ்கரிக்கின்றேன். எ-று. (க)

நூற்பொருள்.

வேறு.

செல்வ மைந்தரில் லாததுஞ் சேர்வதும்
புல்லு தத்தப் புதல்வர் கிடைப்பது
மல்கு புத்திரச் சேதமு மைந்தர்க
ளல்க றுனும் பெருக லளவையும்.

கோயு மாரண முந்திரு நோக்குந்தா
ஞயு மாந்த ரறிய வடமொழித்
தேய்வில் சந்தான தீபிகை தன்னையா
னேயுந் தென்மொழி யாலின் றியம்புகேன்.

(இவற்றின்பொருள்.) ஒருவனுக்குப் புத்திரப்பேறு இலதாதலும், உளதாதலும், சுவீகாரபுத்திரர் கிடைத்தலும், புத்திரர் பிறந்திறத்தலும், சுவற்பபுத்திரர் பிறத்தலும், வெகுபுத்திரர் பிறத்தலும், புத்திரப்பேற்றுக்குப் பிரதிகூலயாகிய நோய்முதலிய காரணங்களும், அவற்றைக் கடிதற்குரிய பரிகாரங்களும், பெரியோர்கடாக்ஷமும் என்னும் இவைகளை ஆராய்தல்வேண்டும் என்னும் விருப்புடைய தமிழ்மொழிப்பயிற்சிமாத்திரமேயுடையார் அறிந்துய்தற்பொருட்டுக் கெடுதலில்லாத வடமொழிச் சந்தானதீபிகையை இயைந்த தமிழ்மொழியிற்பெயர்த்து இப்பொழுது நான் பாடத்தொடங்குகின்றேன். எ-று.

இந்நூல், இருளின்மறைந்துகிடக்கும் பொருள்களைக் கண்ணுக்குப் புலனாகச்செய்யுந் தீபம்போல ஒருவனுக்குக் கிரகநிலையின் மறைந்துகிடக்கும் ஐந்தாம்பாவபலமாகிய சந்தானபலத்தைப் புலப்படக்காட்டுதலின் "சந்தானதீபிகை" என்னும் பெயருடைத்தாயிற்று; இது இலக்கினபாவ முதலிய மற்றைப் பாவபலங்களையும் ஒருங்குகூறுமேனும், சந்தானபலத்தையே மிகுத்துச் சொல்லுதலின் அப்பெயர் மிகுதிபற்றியகுறியாயிற்று. இதுபற்றியே இந்நூலாசிரியர் ஐந்தாம்பாவத்தை முதலில்வைத்ததும் என்க. (உ, ௩)

அவையடக்கம்.

நீதி வித்தகர் சொற்றிடு நீள்பொரு
ளாத விற்கற் றமைந்த புலமையோர்
நீதி னைத்தளித் தேன்கொளல் போலவே
கோதி னைத்தளிக் கொள்வர் பொருளையே.

(இ-ள்.) நான் இப்பொழுது பாடும்படி எடுத்துக்கொண்ட பொருள் சோதிடநூற்றுறையிற்றெளிவடைந்த சாதுரியர்களாற் சொல்லப்படும் விசிட்டமுடைய பொருளாதலின், தேனைக்கிரகிப்பவர்கள் ஈ முதலிய குற்றங்களை நீக்கி அத்தேனைமாத்திரங் கிரகித்துக்கொள்ளுதல்போலக் கற்றறிந்தடங்கிய சான்றோர்கள் என்சொல்லாகிய குற்றத்தைக் கடிந்து பொருளைமாத்திரங் கிரகித்துக்கொள்வார்கள். எ-று.

பாயிரம் முற்றிற்று.

நூல்.

ஐந்தாம்பாவம்.

மலடன்.

அடையு மோரையொ டைந்தினுக் கேழினுக்
குடையர் பொன்வலி குன்ற வுதித்துளோன்
மடந டைப்புதல் வர்ப்பெறு மாண்பிலான்
றுடைதொ டுத்துச் சொருகுங் குழலியே.

(இ-ள்.) இலக்கினதிபதியும், ஐந்தாதிபதியும், ஏழாதிபதியும், குருவும் தத்தம் வலிகுறைந்திருக்கப்பிறந்தவன் புத்திரப்பேறில்லாதவனே யாவன். எ-று.

இலக்கினதிபதியும், புத்திரத்தானதிபதியும், களத்திரத்தானதிபதியும், புத்திரகாரகனகிய குருவும் பெலமேறுதல் புத்திரப்பேற்றிற்கநுகூலமாதல் காண்க. "அடையுமோரை" என்று விதந்தமையின் இலக்கினமும் ஐந்தும் ஏழுமாகிய இத்தானங்களும் வலிபெறுதல் புத்திரப்பேற்றிற் கநுகூலமாம் என்று கொள்க. வலிகுன்றுதலாவது: பகை நீசத்தானங்களினிற்றல், பாடடைதல், பாபக்கிரகதிருஷ்டிபெறுதல், அவர்களோடு சகிதமாதன் முதலியன.

இந்நூலாசிரியர், ஐந்தாமிடத்தாற்பெறப்படும் சந்தானம், பிதா, மாமன், பூர்வபுண்ணியம், யுத்திசாதுரியம், வித்தை, மந்திரம், உத்தியோகம் முதலிய பலபலன்களுட் சந்தானபலனையே பிரித்தெடுத்துக் கொண்டார், இல்லறத்தோர்க் கின்றியமையாச் சாதனமாய் எல்லாச் சுகாநுபவங்களையும் அவர்க்குளவாக்குவது அதுவேயாகலின்.

அச்சந்தான பலனைப் புத்திரப்பேறின்மையாகிய மலடாந்தன்மை, புத்திரநாசம், சுவற்பபுத்திரர் முதலியவாகவகுத்து இதுமுதல் ஐந்துசெய்யுளால் மலடாந்தன்மையைக்குறிப்பிக்குங் கோணிலைகூறுகின்றார். (க)

அஞ்சிற் றீய ருறவதற் காதிப
னெஞ்சி னீசத்தி னெய்த விவர்களை
வஞ்சந் தீர்சுபர் நோக்கற வந்துளோன்
கொஞ்சு மின்சொற் குமரர்சி றற்றவன்.

(இ-ள்.) ஐந்தாமிடத்திற் குரூரக்கிரகங்களிருக்க, ஐந்தாதிபதி நீசத்தானத்திருப்ப, இவர்களைச் சுபக்கிரகங்கள் பாராதிருக்க அக்காலத்துப் பூமியிற் சனனமானவன் மலடனேயாவன். எ-று.

"எஞ்சினீசம்" என்னும்விதப்பால் அதிநீசம் பாடு முதலியனவும் அடங்குதல்காண்க. "வஞ்சந்தீர்சுபர்" என்றது நீசம்முதலிய தோஷங்களாற் பெலகீனமடையாத சுபரை. ஐந்தாமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க, ஐந்தாதிபதி உச்சத்தானத்திருப்ப, அவர்களைச் சுபக்கிரகங்களுக்குதல் செய்தலாகிய புத்திரயோகமும் இதனாற்பெறப்பட்டது. (உ)

வில்லின் மீனின் வியன்மதி சேர்தரப்
புல்லு மைந்திளிற் பாபர் பொலிவுற
நல்லர் நோக்கிவர்க் கற்றிட நண்ணினோற்
கில்லை யில்லை யெழில்கெழு மைந்தரே.

(இ-ள்.) தனுவிலாதல் மீனத்திலாதல் கலைநிறைந்த சந்திரனிருக்க, ஐந்தாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, இவர்களையுஞ் சந்திரனையும் சுபக்கிரகங்கள் பாராதிருக்க அக்காலத்திற்பிறந்தவன் மலடனேயாவன். எ-று. (ந)

ஐந்திற் பாபர் புகுத வதிபதி
நைந்து பாபர் நடுவினி னண்ணியே
யுந்து மாறிரண் டாறெட் டிறச்சுபர்
வந்து பார்ப்பின்றி வைகின் மலடனே.

(இ-ள்.) புத்திரத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, புத்திரத்தானதிபதி குரூரக்கிரகங்களுக்கிடையே சட்டாட்டவியயத் தானங்களிற் பெலங்குன்றியிருக்க, இவர்களுக்குச் சுபக்கிரகங்களோடு சகிதமாதல் அவர்திருஷ்டிபெறுதலாதல் இல்லாதிருக்க அக்காலத்திற் பிறந்தவன் மலடனேயாவன். எ-று.

"நைந்து" என்றது பகைநீசமுதலியவற்றானலிவடைதலை. இதனால், சுபக்கிரகங்கள் புத்திரத்தானத்திருக்கப் புத்திரத்தானதிபதி சுபக்கிரகமத்தியிற் சுபக்கிரகசகிதமாதல் திருஷ்டியாதல் பெற்றுக் கேந்திரலாபாதி சுகஸ்தானங்களிற் பெலமுற்றோங்கியிருத்தலாகிய புத்திரயோகமும் தோன்றுதல் காண்க. (ச)

வெய்யர் கூட்டவைந் தாதிபன் மேவிட
வையந் தீர விவனையு மைந்தையு
மொய்ய தியவர் நோக்கிடத் தோன்றினோற்
குய்யச் செய்யு மதலையின் றுண்மையே.

(இ-ள்.) புத்திரத்தானதிபதி குரூரக்கிரகங்களோடு கூடியிருக்கப் புத்திரத்தானதிபதியையும் புத்திரத்தானத்தையும் குரூரக்கிரகங்கள் பார்வைசெய்ய அக்காலத்திற் பிறந்தவன் மலடனேயாவன். எ-று.

ஒருவனுக்கு இம்மைமறுமை இரண்டினும் உறுதிபயத்தலின் "உய்யச்செய்யுமதலை" என்று விசேடித்தார். புத்திரத்தானுதிபதி சுபக்கிரகங்களோடுகூட அப்புத்திரத் தானுதிபதியையும் புத்திரத்தானத்தையும் சுபக்கிரகங்கள் பார்வைசெய்தல் புத்திரயோகமாதல் காண்க. (ரு)

புத்திரநாசம்.

அட்ட மாதிப னோர்துற வைந்துளோ
னெட்டி னெய்த வினையர்க்கு நல்லர்தாங்
திட்டி வைப்பறத் தோன்றிய செம்மலுக்
கிட்டமாய் மைந்தர் தோன்றி யிறப்பரே.

(இ-ள்.) மிருத்துத்தானுதிபதி புத்திரத்தானத்திருக்க, புத்திரத் தானுதிபதி மிருத்துத்தானத்திருக்க, இவர்களிருவரையும் சுபக்கிரகங்கள் பாராதிருக்க அக்காலத்துப் பிறந்தோனுக்குப் புத்திரர்கள் பிறந்து பிறந்து உயிர்வாழாதிறப்பார்கள். எ-று.

ஆசிரியர், புத்திரப்பேறுண்மையைக் குறிப்பிக்குங் கோணிலை கூறத்தொடங்கி இதுமுதன் மூன்றுசெய்யுளாற் புத்திரநாசத்தைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (சு)

வேந்தன் றீயர் நடுவினின் மேவிட
வாய்ந்த வைந்துக் கதிபன் வலிகெடச்
சாந்தர் நோக்கமுஞ் சார்தலு மின்றெனின்
மாந்த ரீனு மகவு மரிக்குமே.

(இ-ள்.) புத்திரகாரகனுகிய குருப் பாபக்கிரகங்களினிடையே வதிய, புத்திரத்தானுதிபதி பகை நீசம் பாடுமுதலியவற்றுற்றனதுவலி யிழந்திருக்க, இவ்விருவருக்கும் சுபக்கிரகங்களின் னோக்கமேனுஞ் சகிதமேனும் இல்லாதொழிய அக்காலத்துப்பிறந்தோர் பெறும் மக்கள் உயிர்வாழாதிறப்பார்கள். எ-று.

சுபக்கிரகங்களின் சகிதமேனுந் திருஷ்டியேனும்பெற்றுக் குருவும் புத்திரத்தானுதிபதியும் முறையே சுபர்மத்தியிலும் பெலமேறியும் இருத்தல் புத்திரயோகமாம் என்க. (எ)

வேறு.

பகைநீச மைந்தாதி பன்சேர்வ னேனும்
பாடெய்தி னும்பன்னி ரண்டாறு டெட்டுத்
தகையாக வுடையோரு டன்கூடி னாலுந்
தகுமைந்தை யைந்தாதி தனைநன்கி னுள்ளோர்

வகையாக விழிவைத்தி லாரேனு மைந்தா
மகரத்தின் மீனத்தின் வண்சீவன் மேவ
மிகையார்பெ ருந்தூயர் பாராமல் வந்தோன்
வியன்மைந்த ருயிர்மாய மெலிவெய்து வானே.

(இ-ள்.) புத்திரத்தானாதிபதி பகைநீசத்தானங்களில் இருப்பினும், பாடடையினும், சட்டாட்டவியயத்தானாதிபர்களோடு சகிதம் பெறினும், புத்திரத்தானத்தையேனும் அத்தானாதிபதியையேனும் சுபக்கிரகங்கள் பாராதொழியினும், மகரமேனும் மீனமேனும் புத்திரத்தானமாய் அதிற் குருவிருக்க அக்குருவைச் சுபக்கிரகங்கள் பாராதொழியினும் அக்காலத்துப்பிறந்தோன் றனதுபுத்திரர்கள் உயிர்மடியப் புத்திரசோபத்தால் வருந்துவன். எ-று. (அ)

சுவற்பபுத்திரர்.

வருபுத்தி ரத்தானம் வரிவில்ல தாக
மகிழ்பொன்பு குந்தந்த மனையுற்றி ருப்பத்
திருவுற்ற தற்கால வோரைதனை வெய்யோர்
திநோக்கு வைப்பச்செ கத்தேயு தித்தோ
னொருபுத்ர னிருபுத்தி ரர்ப்பெற்று வாழ்வோ
னினமைந்தர் பலபேரை யினத்த காணாற்
புருவத்த னுக்கோட்டி விழியம்பு போக்கிப்
போராடி வயமிக்க பொன்னன்ன மாதே.

(இ-ள்.) தனுசு புத்திரத்தானமாக, அதிற் புத்திரகாரகனாகிய குருவீற்றிருக்க, உதயலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப்பிறந்தோன் ஒருபுத்திரன் அல்லது இரண்டுபுத்திரர்களைப் பெற்று வாழத்தகுவனேயன்றிப் பலபுத்திரரைப் பெற்று மகிழும் பாக்கியம் இல்லாதவனேயாவன். எ-று.

காரகர்கள் காரகத்தானத்திருத்தல் அக்காரகத்துவத்துக்குப்பங்கமாம் என்பது சோதிடநூற்சித்தமாகலின் "வருபுத்திரத்தானம் வரிவில்லதாக மகிழ்பொன்புகுந்தந்தமனையுற்றிருத்தலும்" உதயலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்த்தலும் புத்திரவிருத்தியைக் குறைத்தற் கேதுவாதல் காண்க. இதனாற் புத்திரர் சுவற்பமாதலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (௯)

சுவற்பபுத்திரர், வெகுபுத்திரிகள்.

ஐந்தான தானத்தி னதிபன்றன் கலைசா
லம்புலித னைச்சுங்க னைக்கூடி யடைவே
வந்தான கேந்திரமு றப்பொன்ன வன்முன்
மாபாப ரைக்கூட வன்பாப ரைந்திற்

சிந்தாகு லப்பார்வை செய்யுமமை யத்தே
செகமீது திக்குந்தி றற்புருட னீனுஞ்
சிந்ாத மகவுக்கு ளாண்மகவு குன்றுந்
திகழ்கின்ற பெண்மகவு திருவெய்தி மிகுமே.

(இ-ள்.) புத்திரத்தானதிபதி கலைநிறைந்த சந்திரனையேனுஞ் சுக்கிரனையேனுங் கூடித் தான்வலிபெறுதற்கநுகூலமாகிய கேந்திரத்தானத்திருக்க, பிருகஸ்பதி கொடிய பாபக்கிரகங்களோடு சகிதமாக, புத்திரத்தானத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பூமியிற் சனனமானபுருடன் பெறும் மகக்களுள் ஆண்மக்கள் சுருக்கமடையப் பெண்மக்கள் பெருக்கமடைந்து சிறந்து வாழ்வர்கள். எ-று.

கேந்திரங்கணான்கும் எல்லாக் கிரகங்களும் ஒப்ப வலிபெறுதற் கேலாமையின் "அடைவேவந்தானகேந்திரமுற" என்றுவிசேடித்தார். புதனுக்குங் குருவுக்கும் லக்கினகேந்திரமும், சந்திரனுக்குஞ் சுக்கிரனுக்கும் நீர்க்கீழாகிய சதுர்த்தகேந்திரமும், சனி ராகு கேதுக்களுக்குப் பாடாகிய சப்தமகேந்திரமும், சூரியனுக்கும் அங்காரகனுக்கும் உச்சியாகிய தசமகேந்திரமும் வலிபெறுதற்கநுகூலமாகிய கேந்திரங்களாம். சுக்கிரனுக்கு நீர்க்கீழேயன்றி உதயமும், சனிக்குப் பாடேயன்றி உச்சியும் அநுகூலமாம் என்பதும் ஒருசாரார்மதம்.

புத்திரத்தானதிபதி ஸ்திரீக் கிரகங்களோடு கூடி வலிபெறுதல் பெண்மகவு விருத்தியாதலையும், புத்திரகாரகனும் புத்திரத்தானமும் வலிகுன்றப்பெறுதல் ஆண்மகவு சுருங்குதலையும் காட்டுதல் காண்க. இதனாற் சுவற்பபுத்திரர் வெகுபுத்திரிகளைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (௧௦)

சுவற்பபுத்திரிகள், வேதபுத்திரர். 3916

சாமனுட னேமனிவ ரைந்தினதி பதியைத்
தானணுகி னுங்கேந்தி ரத்தினிடை தங்கச்
சோமனுட ளேபௌம னிருஞ்சனியி ராகுத்
துலங்கிவரு மைந்தில்விழி வைக்கவரு தோன்ற
னேமிபுடை சூழலகி னெஞ்சின்மகிழ் வெய்த
நீதிபுறு மாண்மகவு நீடியுயிர் வாழுங்
காமனடி பேணவரு காமர்மட மானே
காதலுறு பெண்மகவு காசினியி ராதே.

(இ-ள்.) புதனுங் குருவும் புத்திரத்தானதிபதியைக் கூடினும், கேந்திரத்தானத்திற் பெலமேறியிருக்குஞ் சந்திரனோடு அங்காரகனும் சனியிராகுக்களும் புத்திரத்தானத்தைப் பார்ப்பினும் அக்காலத்திற் சனனமானவனுக்குப் பிறக்கும் மக்களுள் ஆண்மக்கள் மனமகிழும்படி நீடித்துயிர்வாழ்வர், பெண்மக்கள் அங்ஙனம் வாழாது மடிவர். எ-று.

புத்திரப்பேற்றிற்கநுகூலமாகப் பெலமேறிய ஐந்து என்பதுதோன்றத் "துலங்கிவருமைந்து" என்றார். இதனாற் புத்திரிகள் சுவற்பமாதலையும் புத்திரர்கள் பெருகுதலையுங் குறிப்பிக்குங்கோணிலைகூறினர்.

தத்தபுத்திரர்.

இயலைந்து புதன்வீடு சனிவீட தாக
விதின்மந்த னானு மிவன்மைந்த னேனு
நயமொன்றி நின்றாலு நயனஞ்செய் தாலு
நவிலைந்தின் வலிதுன்றி நனிநல்லர் தங்கப்
பயிலைந்தி னதிபன்ற னைத்தூய ரானோர்
பாராமல் விடவிப்ப டிக்கேபி றக்குஞ்
செயலொன்று புருடன்சி றாரைப்பெ றானே
திகழ்தத்த புத்திரச்சி றப்பெய்து வானே.

(இ-ள்.) புத்திரத்தானம் புதனுக்கும் சனிக்குமுரிய இராசிகளுள் ஒன்றாக, அதிற் சனியேனும் மாந்தியேனும் அதிபெலமுற்றிருப்பினும் அன்றி அதைப் பார்ப்பினும், புத்திரத்தானத்தில் அதிசுபக்கிரகங்கள் வலிபெற்றுவீற்றிருப்பப் புத்திரத்தானதிபனைச் சுபக்கிரகங்கள் பாராதொழியினும் அக்காலத்திற் பிறந்தோன் தான் புத்திரர்களைப் பெறமாட்டான் பிறர்புத்திரரைத் தத்தபுத்திரராகப் பெற்றுமகிழும் பேறுடையனவன். எ-று.

"தூயரானோர்பாராமல்விட" எனவே பாபக்கிரகங்கள் பார்வைசெய்ய என்பது குறிப்பாகக்கொள்க. இதனாற்றத்தபுத்திரப்பேறுடைமையைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (கஉ)

புத்திரிவிருத்தி.

குளிர்பால கத்தான மாகப்பொ னுறினுங்
குறையாமல் வளர்சந்தி ரன்வந்து புகினு
மொளிர்பால கத்தான மதனிற்பொன் வெள்ளி
யுற்றுரிமை யுச்சமுறி னுஞ்சுங்க னைந்திற்
றெளிவார்க லைச்சந்தி ரற்கூடி நட்பாய்த்
திகழ்காணி யாயுச்ச மாய்ச்சேர்வ னேனு
நளிரார்க டற்பூமி யிடையேபி றந்தோ
னவில்பெண்சி றார்தம்மை நனிநல்கி யிடுமே.

(இ-ள்.) கர்க்கடகமே புத்திரத்தானமாக அதிற் குருவீற்றிருப்பினும், அன்றிப் பூரணசந்திரன் அதில் வந்திருப்பினும், புத்திரத்தானத்திற் குருவோடு சுக்கிரனுங்கூடி ஆட்சியேனும் உச்சமேனும்பெற்றிருப்பினும், அன்றிச் சுக்கிரன் பூரணசந்திரனோடுங்கூடி நட்பாட்சியுச்சங்களுள் ஒன்றுபெற்றுப் பெலமேறி அதில் இருப்பினும் அக்காலத்துப் பிறந்த மகன் புத்திரிகளையே மிகவும் பெற்றுமகிழ்வன். எ-று.

ஸ்திரீ இராசியாகிய கர்க்கடகம் குருவுக்கு உச்சக்ஷேத்திரமாதலாலும், அது புத்திரத்தானமாகவே அக்குருவுக்குப் புத்திரகாரகத்துவபங்கம் வருதலாலும், சந்திரனுக்கு அது சுவக்ஷேத்திர மாதலாலும், சந்திரன் கசுககாரகத்துவமுடைய ஸ்திரீக்கிரகமாதலாலும், கர்க்கடகம் புத்திரத்தானமாக அதிற் குருவிருத்தலும்; சந்திரனிருத்தலும்; புத்திரத்தானத்திற் புத்திரகாரகத்துவ பங்கமெய்திய குருவோடு போககாரகனும் ஸ்திரீக்கிரகமுமாகிய சுக்கிரன் உச்சசுவக்ஷேத்திரத்தான பெலம்பெற்றிருத்தலும்; அச்சுக்கிரன், மேற்சொல்லிய சந்திரனோடுங் கூடிப் புத்திரத்தானத்தில் உச்ச சுவ மித்திருக்ஷேத்திரத்தானபெலமெய்தி வீற்றிருத்தலும் புத்திரிவிருத்திக்கேதுவாதல் காண்க. "உயர்பாலகத்தானமதனிற் பொன்வெள்ளியுற்றுரிமையுச்சமுறினும்" என்றதற்குக் குருவும் சுக்கிரனும் முறையே சுவக்ஷேத்திரமும் உச்சக்ஷேத்திரமுமாகிய தனுசிலிருத்தலும் என்று பொருள்கொண்டு அதுவும் புத்திரிவிருத்தியோகங்களுள் ஒன்றாதல்காண்க. உரிமை உச்சமாதியவற்றை அங்கிசமாகக்கொண்டு பொருளுரைத்தலும்ஒன்று. இதனாற் புத்திரிவிருத்தியைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (௧௫)

புத்திரவிருத்தி.

ஆடாத றேளாத லேந்தான தான
மாகப்பு தன்வெள்ளி யமரேச னுசான்
வாடாம லதிலுற்றி ருந்தாலு நோக்கம்
வைத்தாலு மைந்தாதி வலிதுன்றி யெய்தப்
பீடாரு மோரேச னுங்கூடி நிற்கப்
பிறங்கைந்தி னேப்பாபர் பாராமல் விடினும்
வீடாத புவியிற்பி றந்தோரை றந்தோய்
வெகுபுத்தி ரர்ப்பெற்று மிகவாழு வானே.

(இ-ள்.) மேடமாதல் விருச்சிகமாதல் புத்திரத்தானமாக, அதிற் புதனுங் குருவுஞ் சுக்கிரனுங் கூடிப் பெலமுற்று வீற்றிருப்பினும், அன்றி அதைப்பார்ப்பினும், புத்திரத்தானாதிபதி பெலமேவிப் புத்திரப்பேற்றிற்கநுகூலமாகிய தானமொன்றிலிருக்க, லக்கினாதிபதியும் அப்புத்திரத்தானாதிபதியோடு சகிதயாக, புத்திரத்தானத்தைப் பாபக்கிரகங்கள் பாராதொழியினும் அக்காலத்துப்பிறந்தமகன் தருமசிந்தையுள்ள வெகுபுத்திரர்களைப் பெற்று மனமகிழ்ந்து வாழ்வன். எ-று.

தனுசுதயமாக மேடத்திற் புதனுஞ் சுக்கிரனுங் குருவும் இருத்தல்; கர்க்கடகம் உதயமாக விருச்சிகத்திற் புதனுஞ் சுக்கிரனுங் குருவும் இருத்தல்; தனுசு உதயமாக அதிற்குருவும், துலாத்திற் புதசுக்கிரரும் இருந்து மேடத்தைப்பார்த்தல்; தனுசு லக்கினமாகச் சிங்கத்திற் குருவும், துலாத்திற் புதசுக்கிரரும் இருந்து மேடத்தைப்பார்த்தல்; கர்க்கடகம் உதயமாக அதிற்குருவும், இடபத்திற் புதசுக்கிரரும் இருந்து விருச்சிகத்தைப்பார்த்தல், கர்க்கடகம் உதயமாக மீனத்திற் குரு

வும், இடபத்திற் புதசுக்கிரரும் இருந்து விருச்சிகத்தைப் பார்த்தல் என்னுமாறுமே "ஆடாதரேளாதலேந்தானதான மாகப்புதன்வெள்ளி யமரேச னுசான் வாடாம லதிலுற்றி ருந்தாலுநோக்கம் வைத்தாலும்" என்றதனுற் பெறப்படும் வெகுபுத்திரயோகங்களாதல் காண்க. இது முதல் இரண்டுசெய்யுளாற் புத்திரவிருத்தியைக்குறிப்பிக்குங் கோணி லேகூறுகின்முர். (கச)

மீனம்வி ருச்சிகம் விற்சிங்க மேடம்
 விஞ்சஞ்ச தாயிதில் விளங்கார லெய்த
வானந்தொ ழுந்தேசி கன்பார்வை செயினும்
 வருபுத்தி ரத்தான மனையாதி டன்ரு
ஸீனந்த ராகல்ல ரைக்கூடி னுலு
 மிவர்பார்வை பெற்ருலு மியனல்ல ருக்குத்
தானஞ்சொ னடுவாகி நற்பார்வை யுறினுந்
 தலத்தேபி றந்தோன்ற னக்கெச்ச மிகுமே.

(இ-ள்.) மீனம், விருச்சிகம், தனுசு, சிங்கம், மேடம் என்னும் ஐந்தனுள் ஒன்று புத்திரத்தானமாக, அதில் அங்காரகன் வீற்றிருக்கக் குரு அவ்வங்காரகனைப் பார்ப்பினும், புத்திரத்தானதிபதி புத்திரப்பே ற்றிற்கநுகூலராகிய சுபக்கிரகங்களோடு சகிதமானுலும், அவர்கடிரு ஷ்டிபெற்ருலும், அன்றிச் சுபக்ஷேத்திரத்திற் சுபக்கிரகமத்தியிற் சுப திருஷ்டிபெற்றிருப்பினும் அக்காலத்திற்பிறந்த மகன் வெகுபுத்திரர்க ளைப் பெற்றுமகிழும் பேறுடையனுவன். எ-று.

புருடக்கிரகங்களுக்குரிய இராசிகளுள் ஒன்று புத்திரத்தானமாக அதிற் புருடக்கிரகமாகிய அங்காரகன் இருந்து புத்திரகாரகனுகிய குருவின் பார்வைபெறுதலும், புத்திரத்தானதிபதி "ஈனந்தராநல்ல ரைக்கூடல்" முதலியவாகச் சொல்லிய பெலமடைதலும் வெகுபுத் திரப்பேற்றிற்கநுகூலமாதல் காண்க. (கரு)

சற்புத்திரர்.

பேசுஞ்சு தத்தான முடையோன விடமே
 பெலமாக வுற்ருலு மவனேழி னெய்தத்
தேசொன்றி வருமோரை யிற்பாப ரிருகண்
 செய்யாம னில்லாமல் விடினுஞ்செ ழும்பொ
னேசின்றி யைந்தேழி னெய்தியிட வெய்யோ
 ரிகற்பார்வை யோரைக்கி லாதும்பி றந்தோ
னேசந்த ரும்புத்தி ரர்ப்பெற்று வாழ்வோ
 னெஞ்சத்து விரகத்தி மிகுவிக்கு மயிலே.

(இ-ள்.)புத்திரத்தானதிபதி புத்திரத்தானத்திற் பெலமுற்றிருப் பினும், புத்திரத்தானதிபதி போகத்தானத்திருக்க லக்கினத்திற் பாபக் கிரகங்கள் இருத்தலேனும் பார்த்தலேனும் செய்யா தொழியினும்,

குருப் புத்திரத்தானத்திலேனும் போகத்தானத்திலேனும் வீற்றிருக்க லக்கினத்துக்குப் பாபக்கிரகத்திருஷ்டி இல்லாதொழியினும் அக்காலத்துப்பிறந்தோன் தன்னெஞ்சிலன்புமிகுவதற்கேதுவாகிய குணங்கள் அமைந்த சற்புத்திரரைப்பெற்று வாழ்வோனவன். எ-று.

பெலமாகவுறுதல் - உச்ச சுவ மித்திரு க்ஷேத்திரத்தான பெல முதலிய பெலமெய்தல். ஒருவனிடத்தமையுங் குணங்களைக் கண்ணாடிபோற் புலப்படக்காட்டுதலின் "தேசொன்றிவருமோரை" என்று விதந்தார். சுபக்கிரகசம்பந்தம்பெற்ற ஓரை என்பது தோன்ற அங்ஙனம் விசேடித்தாரெனினும் அமையும். பாபக்கிரகங்கள் லக்கினத்தில் இருத்தலும் அதைப்பார்த்தலும் தூர்க்குணங்களையே புலப்படுத்தலின் "ஓரையிற்பாபரிருகண்செய்யாமனில்லாமல்விடினும்" என்றும் "வெய்யோரிகற்பார்வையோரைக்கிலாதும்" என்றுங்கூறினர். மூடம் பாடுமுதலிய ஊனங்களை விலக்குதற்குச் "செழும்பொன்" என்றும், சத்துருநீச க்ஷேத்திரங்களை விலக்குதற்கு "எசின்றி" என்றுங் கூறினர். புத்திரத்தானதிபதியேனும் புத்திரகாரகனேனும் புத்திர யோகத்தானங்களிலிருத்தல் புத்திரப்பேற்றிற்கும், லக்கினம் பெலமுறுதல் புத்திரரின் சற்குணவிருத்திக்கும் அநுகூலமாதல் காண்க. இதுமுதனான்குசெய்யுளாற் சற்புத்திரப்பேற்றைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (கசு)

வைக்குஞ்சு தத்தான வதிபன்பெ லத்தே
    மருவிச்சு பர்க்கூடு வைகச்சு பக்கோ
ளுய்க்குஞ்செ ழும்பார்வை வைத்தாலும் விற்றே
    ளொண்மீன மறிசிங்க மோரைந்த தாகத்
தொக்கிந்த மனையாளர் புருடாங்கி சத்தே
    சொல்லாணி ராசிதனி லெய்தித்து லங்கப்
புக்கிந்த வுலகிற்பி றந்தோன ளிக்கும்
    புகழ்துன்ற வளர்கின்ற பலமைந்தர் தமையே.

(இ-ள்.) புத்திரத்தானதிபதி பெலமேறிச் சுபக்கிரகபந்தியில்வீற்றிருக்கச் சுபக்கிரகங்கள் அவனைப்பார்ப்பினும், தனுசு, விருச்சிகம், மீனம், மேடம், சிங்கம் என்னும் இவைகளுள் ஒன்று புத்திரத்தானமாக, அப்புத்திரத்தானதிபதி புருடாங்கிசம்பெற்றுப் புருடராசியிற் பெலமுற்று வீற்றிருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் தனக்குக் கீர்த்திமிகவுமுண்டாக வளர்கின்ற சற்புத்திரர் பலரைப்பெறுவன். எ-று.

முதல்யோகத்தில் புத்திரத்தானதிபதி பெலமேறுதல் புத்திரவிருத்தியையும், சுபக்கிரகபந்தியிற் சுபதிருஷ்டிபெற்றிருத்தல் சற்குணவிருத்தியையும், இரண்டாம்யோகத்தில் புருடக்கிரகராசி புத்திரத்தானமாதலும், அப்புத்திரத்தானதிபதி புருடாங்கிசம்பெற்றுப் புருடராசியிலிருத்தலும் அவ்விரண்டனையுங் குறிப்பித்தல் காண்க. (கஎ)

வேறு.

ஓரையி னிறைவ னோந்துக் குரியனே ருழியுற் றாலு
நேரதாய்த் தம்மிற் றாமே நிலையுற நோக்கி னாலு
மேர்கெழு மிராசி நாத னுடனேந்தி னிறையுற் றாலும்
பார்வைசெய் திடினுஞ் செல்வப் பாலரைப் பெறுவன் பாவாய்.

(இ-ள்.) இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் ஒருக்ஷேத்திரத்திருப்பினும், அன்றி ஒருவரையொருவர் பெலமாகப் பார்ப்பினும், குருப் புத்திரத்தானாதிபதியோடுங் கூடிப் புத்திரத்தானத்திலிருப்பினும் அன்றி அதைப்பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் சற்புத்திரரைப் பெறுவன். எ-று.

இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் ஒருங்குகூடியிருத்தல், அன்றி ஒருவரை ஒருவர் பார்த்தல், புத்திரத்தானத்தில் இலக்கினாதிபதியுங் குருவுங் கூடியிருத்தல், அன்றி அவ்விருவரும் ஒருவரையொருவர் பார்த்தல் என்னும் இந்நான்கு சற்புத்திரயோகங்களுள்ளும் இலக்கினாதிபதியாற் சற்குணவிருத்தியும், புத்திரத்தானாதிபதி புத்திரகாரகர்களாற் புத்திரவிருத்தியுங் குறிப்பிக்கப்படுதல் காண்க. (கஅ)

மருவுபுத் திரத்தா னத்தின் மன்னவ னோரை மன்ன
னிருவரு நோக்கத் தோன்றி னின்புறு மைந்தர் சேர்வ
ரரிபநட் பாட்சி யுச்ச ராசியங் கிசமா யைந்திற்
குரியனின் றாலு நல்ல மைந்தரை யுயிர்ப்பன் மாதோ.

(இ-ள்.) இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் இலக்கினத்தைப் பார்ப்பினும், புத்திரத்தானாதிபதி நட்பாட்சியுச்சராசியங்கிசங்களிற் பெலமேறியிருப்பினும் அக்காலத்துப் பிறந்தோன் சற்புத்திரரைப்பெற்று மகிழ்வன். எ-று. (கக)

துர்ப்புத்திரர்.

சத்துரு நீச மான விராசியங் கிசங்க டன்னி
லொத்திடுஞ் சுதத்தா னத்துக் குரியவ னுற்று மேவ
வித்தலை தோன்றி னோர்க்கே யெய்துபுத் திரர்கள் பொல்லாக்
குத்திர முடைய துட்டக் குணமுளார் கொடியன் னாளே.

(இ-ள்.) புத்திரத்தானாதிபன் பகைநீசவிராசியங்கிசங்களிலிருக்க அக்காலத்துப் பிறந்தமகனுக்கு வந்துற்பவிக்கும் புத்திரர்கள் பொல்லாத வஞ்சனையுடைய துர்க்குணமுள்ளோராவர். எ-று.

இதனாற் றுர்ப்புத்திரப் பேற்றைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (உ0)

புத்திரிகளேபிறந்தல்.

நள்ளியாய்க் கோலா யேறுய்ப் புத்திரத் தான நண்ண
வொள்ளிய தலைவன் பெண்பா லுற்றிடு மிராசி யம்சங்
கொள்ளவே புவியிற் றேன்றுங் குரிசில்பெண் சிறுரே யீனும்
வள்ளிதழ்க் கமலப் பூவை மருட்டிய வதன மாதே.

(இ-ள்.) கர்க்கடகம், இடபம், துலாம் என்னும் இவ்விராசிகளுள் ஒன்று புத்திரத்தானமாக, புத்திரத்தானதிபதி ஸ்திரியிராசியங்கிசங்களில் வீற்றிருக்க அக்காலத்துப்பிறந்த மனுடன் புத்திரிகளையே பெறும்பேறுடையனுவன். எ-று.

நள்ளிமீகாலேறுகள் ஸ்திரிக்கிரகங்களுக்குரிய இராசிகளாதலும், அவ்விராசியதிபர்கள் ஸ்திரியிராசியங்கிசங்களிலிருத்தலும் புத்திரிகளேபிறத்தற்கநுகூலமாதல் காண்க. "ஒள்ளியதலைவன்" என்றதனுற் குருநாக்கிரகசம்பந்தம்பெறுமையும், மேவ என்னுது கொள்ள என்றதனுல் ஸ்திரியிராசியங்கிசங்களுள்ளும் நட்பாட்சியுச்ச இராசியங்கிசங்களுங் கொள்க. இதனுற் புத்திரிகளே பிறத்தலைக்குறிப்பிக்குங் கோணிலை கூறினுர். (உக)

புத்திரர்களேபிறத்தல்.

ஆதவன் வியாழன் செவ்வா யைந்தினுக் குடைய ராகிப்
பேதமில் புருட ராசி யங்கிசம் பெற்று ரென்றுற்
றீதிலா மைந்தர் தாமே சேர்குவர் சேல்போற் கண்ணுற்
போதமே பறித்து நாளும் புருடரைச் செகுக்கு மாதே.

(இ-ள்.) சூரியனுங் குருவும் அங்காரகனும் என்னுமிவர்களுள் ஒருவர் புத்திரத்தானதிபர்களாய்ப் புருட இராசியங்கிசங்களினிற்பாராயின் அக்காலத்துப்பிறந்த மகனுக்குப் புத்திரர்களேவந்து பிறப்பர்கள். எ-று.

புத்திரத்தானதிபதி புருடக்கிரகமாய்ப் புருட இராசியங்கிசம்பெறுதல் புத்திரர்களேபிறத்தற்கநுகூலமாதல் காண்க. "பேதமில்புருடராசியங்கிசம்" என்று விதந்தமையாற் பகைநீசமொழித்துக்கொள்க. இதுமுதன் மூன்றுசெய்யுளாற் புத்திரர்களேபிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றுர். (உஉ)

வெய்யவரைந் தான தானம் விழித்திடா துறவைந் தாதி
துய்யவத் துச்ச மேவச் சுபர்புரு டாங்கி சத்தே
யெய்தின ரிவனை நோக்க விப்புவி யுதித்து ளோற்கு
மையணி விழியி னுளே மைந்தர்தாம் வருவர் மாதோ.

(இ-ள்.) புத்திரத்தானங் குரூரக்கிரகதிருஷ்டிபெறு தொழிய, புத்திரத்தானாதிபதி அதியுச்சம்பெற்றிருக்க, புருட இராசியங்கிசம்பெற்ற சுபக்கிரகங்கள் அப்புத்திரத்தானாதிபதியைப் பார்க்க அக்காலத்துப் பிறந்த மகனுக்குப் புத்திரர்களே வந்துபிறப்பர்கள். எ-று.

புத்திரத்தானத்துக்குப் பாபக்கிரகநோக்கில்லாமையும், புத்திரத்தானாதிபதி அதியுச்சத்தான பெலமடைந்து புருட இராசியங்கிசம்பெற்ற சுபக்கிரகங்களின் பார்வைபெறுதலும் புத்திரர்களே பிறத்தற்கநுகூலமாதல் காண்க.

அதியுச்சபாகைகளாவன: சூரியனுக்கு மேடத்திற் பத்தாம்பாகையும், சந்திரனுக்கு இடபத்தில் மூன்றாம்பாகையும், புதனுக்குக் கன்னியிற் பதினைந்தாம்பாகையும், குருவுக்குக் கர்க்கடகத்தில் ஐந்தாம்பாகையும், சுக்கிரனுக்கு மீனத்தில் இருபத்தேழாம்பாகையும், சனிக்குத் தனுசில் இருபதாம்பாகையும் அதியுச்சபாகைகளாம். (௨௩)

எட்டி னாறினி னீராறி னைந்தினுக் கிறைவன் மேவ
மட்டிலா வலிமை சார்ந்து நல்லவர் நோக்கம் வைத்தான்
முட்டிலா வாழ்க்கை மைந்தர் மொய்ம்புட னவத ரிப்பர்
பட்டினாற் புனைந்த சோதிப் பையர வல்கு லாளே.

(இ-ள்.) புத்திரத்தானாதிபதி சட்டாட்டவியயத்தானங்களுள் ஒன்றிலிருப்ப, அப்புத்திரத்தானாதிபனைச் சுபக்கிரகங்கள் அதிகபெலமடைந்திருந்து பார்ப்பின் அக்காலத்துப்பிறந்த மகனுக்குத் தீர்க்காயுசுஞ் சரீரபெலமுமுள்ள புத்திரர்களே வந்துபிறப்பர்கள். எ-று.

"நல்லவர்" எனப் பொதுப்படக் கூறினாரேனும் புத்திரகாரகனாகிய குருவும் புருட இராசியங்கிசம்பெற்ற சந்திரன் முதலியோருமே கொள்ளப்படும். (௨௪)

புத்திரநாசம்.

ஆடல்சே ரிராகு வைந்தி னானுகவவ் வதிப னோடு
கூடிட நல்லோர் பார்வை யிவன்மிசைக் கூடி டாதேற்
பாடகப் பாதப் பாவாய் பன்னகத் தேவர் முன்னா
ளாடியே நவின்ற சாப மொழியினாற் புதல்வர் நாசம்.

(இ-ள்.) இராகு புத்திரத்தானத்திருக்க அன்றிப் புத்திரத்தானாதிபனோடு சகிதமாகச் சுபக்கிரகதிருஷ்டி அவ்விராகுவுக்கு இல்லாதொழியின் அக்காலத்துப்பிறந்த மனுடனுக்கு நாகசாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ-று.

இதுமுதல் ஆறுசெய்யுளாற் புத்திரநாசத்தையும் அதன்காரணத்தையுங் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (௨௫)

ஓரையிற் றிரிகோ ணத்தி லுபர்சனி மாந்தி யேனுந்
நீரமுற் றிருப்பத் தூயோர் திருட்டிமற் றிவர்க்கின் ருயிற்
சீர்கெழும் பிதிர்தோ டத்தாற் புத்திர நாசஞ் சேருங்
கூர்விழி கொழுவிக் காமக் கொழுந்தழல் வளர்க்கு மாதே.

(இ-ள்.) இலக்கினத்திலேனும், ஐந்தாம் ஒன்பதாமிடங்களிலேனும் சனியாயினும் மாந்தியாயினும் பெலமுற்றிருப்பச் சுபக்கிரகதிருஷ்டி அவர்க்கில்லாதிருப்பின் அக்காலத்துப் பிறந்தோனுக்குப் பிதிர் சாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ-று. (உசு)

மங்கல னைந்தின் மேவ மருவுசத் துருத்தா னத்தோ
னங்கவன் றன்னைக் கூடி யமரவவ் விருவர் தாமுந்
துங்கமார் சுபர்க ணோக்கந் தோய்ந்திடப் பெறுரேன் மாற்ருர்
மங்கிடச் செய்த வஞ்சச் செயலினன் மைந்தர் நாசம்.

(இ-ள்.) அங்காரகன் புத்திரத்தானத்திருக்க,அவ்வங்காரகனோடு சத்துருத்தானுதிபதி சகிதமாக, அவ்விருவருக்கும் சுபக்கிரகதிருஷ்டி இல்லாதொழியின் அக்காலத்துப்பிறந்தோனுக்குச் சத்துருக்கள்செய்த பில்லி சூனியமுதலிய க்ஷுத்திரப்பிரயோகங்களாற் புத்திரநாசமுண்டாம். எ-று.

"வீறிடச் செவ்வா யைந்தின் மேவிட வதுவின் ருயி, னுறுடையானைக் கூடி யைந்திடை யணுக நல்லோர், பேறுடைப் பார்வை தீரப் பிறந்தவன் றனக்குப் பாவாய், மாறுடைப் பகைவர் செய்த வஞ்சத்தான் மைந்தர் நாசம்." என்றும் பாடபேதம் உண்டு. இதனுல், அங்காரகன் புத்திரத்தானத்திற் சத்துருத்தானுதிபதியோடு சகிதமாதலும் பில்லி சூனியமுதலியவற்ருற் புத்திரநாசம் உண்டாதலைக் குறிப்பித்தல் காண்க. (உஎ)

வேறு.

ஐந்துக்குடை யோனைந்தினி லமரச்சுபர் பார்வை
சிந்தித்தில ராய்நின்றிடத் தீயோரவை செய்ய
விந்தப்புவி மிசையேவரு மேந்தற்கிறும் புதல்வர்
முந்திச்சுர ராேனாரிடு சாபக்கொடு மொழியால்.

(இ-ள்.) புத்திரத்தானுதிபதி புத்திரத்தானத்திருக்கச் சுபக்கிரகங்கள் அப்புத்திரத்தானுதிபதியைப் பாராதொழிய, பாபக்கிரகங்கள் பார்வைசெய்ய அக்காலத்துப் பிறந்தோனுக்குத் தேவர்களிட்ட சாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ-று. (உஅ)

நாட்டும்மொரு நாலிற்கொடி யோர்நண்ணிட வைந்தாம்
வீட்டுக்குடை யோன்மந்தனு டன்கூடிவி ளங்கக்
காட்டும்மிரண் டாமிற்கொடி யோர்வந்துக லந்தா
லீட்டுங்கொடும் பவந்தாய்புரிந் திடலான்மக வழியும்.

(இ-ள்.) மாதிருத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, புத்திரத்தானுதிபதி சனியோடு சகிதமாய்விளங்க, இரண்டாம் ஆறாமிடங்களிற் குரூரக்கிரகங்கள் இருப்பின் அக்காலத்துப்பிறந்த மகனுக்கு அவன்றாய்செய்த பாவத்தாற் புத்திரநாசமுண்டாம். எ-று.

புத்திரத்தானுதிபதி சனியோடு சகிதமாதலும், இரண்டாம் ஆறாமிடங்களிற் பாபக்கிரகங்கணிற்றலும் புத்திரநாசத்தையும், மாதிருத்தானத்திற் பாபக்கிரகங்கணிற்றல் அதற்குக்காரணமாகிய தாய்செய்த பாவத்தையுங் குறிப்பித்தல் காண்க. (உகூ)

ஒன்பானிடந் தீயோர்புக வைந்தாமிட முடையோன்
வன்பாகிய சனியோடுற வாய்க்குந்திரி கோணத்
தின்பாகிய குளிகன்பிறந் திருக்கப்பிறந் தோர்க்கு
முன்பாம்பிதிர் சபதாற்சுத ரின்றாம்பனி மொழியே.

(இ-ள்.) பிதிர்த்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, புத்திரத்தானுதிபதி சனியோடு சகிதமாக, குளிகன் திரிகோண இராசிகளுள் ஒன்றிலிருக்க அக்காலத்துப் பிறந்தோனுக்குப் பிதிர்சாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ-று.

திரிகோண இராசிகளாவன: இலக்கினமும் அதற்கைந்தாமிராசியும் அதற்கைந்தாமிராசியாகிய ஒன்பதாமிராசியுமாம். சபதத்தால் எனற்பாலது சபதால் என விகாரமாயிற்று. "வாய்க்குந்திரிகோணம்" என்று விதந்தமையின் புத்திரத்தானமே கொள்க. பிதிர்த்தானத்திற் குரூரக்கிரகங்களிருத்தல் பிதிர்சாபத்தையும், புத்திரத்தானுதிபதி சனியோடு சகிதமாதலும், குளிகன் திரிகோணத்திருத்தலும் புத்திரநாசத்தையுங் குறிப்பித்தல் காண்க. (௩௦

ஐந்தாம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௫.

முதலாம்பாவம்.

தீராப்பிணி, மரணம்.

எழுமோரையி னதிபன்கொடி யோர்மத்தியி னிருப்ப
நழுவாதிலக் கினத்தேகொடுங் கோளானவை நண்ண
வழுவாக்கலைப் புலவோன்மிக வலிகுன்றிடப் பிறந்தோன்
முழுநோயினி லமிழ்ந்துற்றுயிர் முடிவானிது திடனே.

(இ-ள்.) இலக்கினுதிபதி குரூரக்கிரகங்கட்கிடையே இருக்க, இலக்கினத்திற் குரூரக்கிரகங்கள் விற்றிருக்க, புதன் மிகப் பெலகீன

மடைந்திருக்க அக்காலத்துப் பிறந்தமகன் தன்னுயுண்முழுது நோயி லேயே அமிழ்ந்திக்கிடந்துயிர் துறப்பன் இது நிச்சயம். எ-று.

இப்பாவத்தாற் பெறப்படுவன கீர்த்தி, மூர்த்தி, சீவன், அங்கம், கல்வி, சிரசு, பாக்கியம், புசிப்பு, ஆயுள், பிணி, மரணம், தளைமுதலி யனவாம். இது முதல் ஏழுசெய்யுளாற் றீராப்பிணியையும் மரணத்தை யுங் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (க)

ஏரார்தரு மெட்டாதிப னீசம்பகை யெய்தச்
சீரார்தர வருமோரையிற் றீயோர்புக நல்லோர்
பாராதுறப் புவிமேல்வரு பாலன்பல நோயால்
வாரார்முலை மாதேயுயிர் மாய்வானெனல் வழக்கே.

(இ-ள்.) ஆயுட்டானாதிபதி சத்துருநீசக்ஷேத்திரத்திற் றன்வலியி ழந்திருக்க, இலக்கினத்திற் குரூரக்கிரகங்கள் புகுந்திருக்க, சுபக்கிரகங் கள் அவர்களைப் பாராதொழிய அக்காலத்துச் சனனமான புருடன் தீராத பற்பலநோய்களால் வருந்தி உயிர்மாய்வன். எ-று.

ஆயுட்டானாதிபதி சுபக்கிரகதிருஷ்டிபெறாது சத்துரு நீச க்ஷேத் திரத்திற் பெலங்குன்றியிருத்தல் ஆயுட்சுருக்கத்தையும், சுபக்கிரக திருஷ்டியின்றி இலக்கினத்திற் பாபக்கிரகங்களிருத்தல் தீராப்பிணி யையுங் குறிப்பித்தல் காண்க. ஒருவனுக்குரிய பற்பலபோகங்களும் இலக்கினத்தாற் குறித்துணரப்படுதலிற் "சீரார்தரவருமோரை" என் று விசேடித்தார். (உ)

ஒருபன்னிரண் டெட்டாறினிற் றூமாபதி யோங்கத் 3916
தருமோரையி னதிபன்றனைச் சவிதாசுதன் கூட
வருமோரையி னல்லோர்விழி வைப்பற்றிடப் பிறந்தோன்
பெருநோய்கொடு நமனூருறை பெருந்திக்கினிற் புகுமே.

(இ-ள்.) சட்டாட்டவியயத்தானங்களிற் சந்திரனிருக்க, இலக்கி னாதிபதியோடு சனிகூடியிருக்க, இலக்கினத்துக்குச் சுபக்கிரகதிருஷ்டி யில்லாதிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் பெருவியாதியினால் வருந்தி உயிர்துறப்பன். எ-று.

தேகசுககாரகனாகிய சந்திரன் பிணி மரண துக்கத் தானங்களிற் புகுந்திருத்தலும், சீவக்கோளாகிய இலக்கினாதிபதியோடு நோய்முக னாகிய சனி கூடுதலும், சீவத்தானத்துக்குச் சுபக்கிரகதிருஷ்டியில்லா மையும் பெருநோய்கொள்ளுதலையும், அதனால் ஆயுள் க்ஷீணமடைந்து உயிர்நீங்குதலையுங் குறிப்பித்தல் காண்க. (௩)

பிறையுங்குளி கனுங்கூடியெட் டாறந்தம் பிறங்க
நிறையும்மிலக் கினத்தேகொடி யோர்நின்றிடப் பிறந்தோ
னறையும்பெரும் பிணியான்மிக வழுங்கிப்பக டுரு
மிறைவன்பதி புகுவன்மயி லினையாமியன் மாதே.

(இ-ள்.) சந்திரனுங் குளிகனுங்கூடிச் சட்டாட்டவியயத்தானங்களுள் ஒன்றிலிருக்க, இலக்கினத்திற் குரூரக்கிரகங்கள் இருக்க அக்காலத்துப் பிறந்தமகன் பெருவியாதியான் மிகவும்வருந்தி இறப்பன். எ-று. (௪)

உதயத்திறை தீயோருட னுறவோரையிற் குளிகன்
வதியத்திகழ் மதியத்தொடு கொடியோர்களு மருவித்
தகையெட்டினி லாறிற்பனி ரண்டிற்றயங் கிடுமேல்
விதுவொத்திடு நுதலாயுயிர் வீவானெடு நோயால்.

(இ-ள்.) இலக்கினாதிபதி குரூரக்கிரகங்களோடு கூடியிருக்க, இலக்கினத்திற் குளிகன்வீற்றிருக்க, சந்திரன் குரூரக்கிரகங்களுடன் கூடிச் சட்டாட்டவியயத்தானங்களுள் ஒன்றிலிருப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் நீண்டநோயினால்வருந்தி உயிர்துறப்பன். எ-று. (௫)

அறிவார்புதன் குளிகன்னொரு மனைகூடிட வாறி
னெறியார்புனி ரண்டெட்டினி னிலவானது குலவப்
பிறியாமலொன் பானைந்தினிற் கொடுங்கோளவை பிறங்கில்
வெறிபார்குழ லாளேகொடு நோயால்விழு முடலே.

(இ-ள்.) புதனுங் குளிகனும் ஒரு இராசியிற் கூடிவீற்றிருக்க, சந்திரன் சட்டாட்டவியயத்தானங்களுள் ஒன்றிலிருக்க, ஐந்தாமிடம் ஒன்பதாமிடங்களிற் குரூரக்கிரகங்கள் இருப்பின் அக்காலத்துப்பிறந்த மகனுக்குக் கொடியநோய்களாற் பீடிக்கப்பட்டு உடம்புநசிக்கும். எ-று.

ஐந்தாமிடமும் சீவத்தானமாதலாலும், ஒன்பதாமிடஞ் சகல போகத்தானமாதலும் அவற்றிற் "கொடுங்கோளானவைபிறங்கலு"ம் கொடுநோயால் உடல்வீடற்குக் காரணமாதல் காண்க. (௬)

தயங்கும்முப யத்தேபொலி சராசியங் கிசத்தே
யயங்கொண்டிடு மதியந்தனு மோரேசனு நண்ண
வயங்குந்திரி கோணத்திடை கொடியோர்களும் வதிந்தா
லியங்கும்பிணி தெறப்பாலக னிறப்பானென விசைப்பார்.

(இ-ள்.) சந்திரனுஞ் சனியும் இலக்கினாதிபதியும் உபயவிராசியிற் சரவிராசியங்கிசத்திலிருக்கக் குரூரக்கிரகங்கள் திரிகோணவிராசிகளிலிருப்பின் அக்காலத்துப் பிறந்தமகன் நீடித்தநோயால் வருந்தியிறப்பன். எ-று.

சந்திரனுஞ் சனியும் இலக்கினாதிபதியும் முறையே தேகசுககாரகனும், ஆயுசு ரோககாரகனும், சீவத்தானாதிபதியுமாதலால் அவர்கள் உபயவிராசியிற் சரவிராசியங்கிசத்து நிற்றல் "இயங்கும்பிணிதெறப் பாலகனிறத்த"ற்குக் காரணமாதல் காண்க. (எ)

பிணிசாந்தம்.

வேறு.

காவுறு தீயவ ரோரை கைக்கொளப்
பரவுமெட் டாறுபன் னிரண்டிற் பான்மதி
விரவநல் லவர்விழி சாமி மீநிரிற்
றரவரி னோய்கொடு பிழைத்தல் சாருமே.

(இ-ள்.) இலக்கினத்திற் குரூரக்கிரகங்களிருக்க, சந்திரன் சட்டாட்டவியயத்தானங்களிலிருக்க, இலக்கினாதிபதியைச் சுபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பிறந்தமகன் பிணிகொண்டுவருந்தி அது சாந்தமாக நன்குசீவிப்பன். எ-று.

குரூரக்கிரகங்களது கொடுமைமிகுதியும் இலக்கினத்தினதின்றியமையாமையுந் தோன்றக் "காவுறுதீயவரோரைகைக்கொள" என்று கூறினர். குரூரக்கிரகங்கள் இலக்கினத்திருத்தலும், சந்திரன்றுர்த்தானத்திருத்தலும் பிணிகொள்ளுதற்கும், இலக்கினாதிபதி சுபதிருஷ்டிபெறுதல் அப்பிணி சாந்தமாய் நன்குசீவித்தற்கும் காரணமாதல் காண்க.

இதுகாறும் பிணிகொண்டு அது மரணத்தோடிறுதலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். இதுமுதன் மூன்றுசெய்யுளாற் பிணிகொண்டு பின்பு அதுசாந்தமாய் நன்குசீவித்தலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (அ)

உடலுயிர்க் கிறைவரி னொருவர் பாபியர்
நடுவுற வோரையை நல்லர் நோக்குறத்
தொடுகடற் புவியிடைத் தோன்று மானவற்
கிடுகிடை யாய்ப்பிணி யெய்தித் தீருமே.

(இ-ள்.) தேகத்தானாதிபதியும் சீவத்தானாதிபதியும் என்னுமிருவருள் ஒருவர் குரூரக்கிரகங்களுக்கிடையே யிற்றிருக்க, இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பிறந்த மனுடனை இடுகிடையாய்ப் பிணிசார்ந்து வருத்தியும் பின்பு சாந்தமாகும். எ-று.

உடல்=சந்திரலக்கினம். உயிர்=உதயலக்கினம். இருவரில் ஒருவர் பாபியர்நடுவுறல் பிணிகொள்ளுதற்கும், ஓரையைநல்லர்நோக்குதல் அது சாந்தமாதற்குங் காரணமாதல் காண்க. "ஒருவர்பாபியர்நடுவுற" எனவே ஏனையர் வலியிழவாதிருக்க என்பதும் பெறப்படும். மானவற்கு என்றது உருபுமயக்கம். இடுகிடை வழக்கச்சொல். (கூ)

ஓரைம னட்சிநட் புச்ச முற்றுலா
ரூருறு மோரையை நோக்க வாட்சிநட்
பேர்பெறு முச்சமென் றிசைக்கு மங்கிசஞ்
சார்தரி னோயொழிந் தாயுள் சாருமே.

(இ-ள்.) குளுரக்கிரகங்கள் இலக்கினத்தைப்பார்க்க, இலக்கினுதிபதி உச்ச சுவ மித்திரு க்ஷேத்திரங்களுள் ஒன்றில் உச்ச சுவ மித்திரு க்ஷேத்திராங்கிசம் பெற்றிருப்பின் அக்காலத்துப் பிறந்த மனுடனுக்குப் பிணிசாந்தமாய்த் தீர்க்காயுசு உண்டாம். எ-று.

ஒல்லார் ஓலார் எனவிகாரமாயிற்று. குளுரக்கிரகங்கள் இலக்கினத்தைப்பார்த்தல் பிணிகொள்ளுதற்கும், இலக்கினுதிபதி உச்ச சுவ மித்திரு க்ஷேத்திரங்களுள் ஒன்றில் உச்ச சுவ மித்திரு க்ஷேத்திராங்கிசம் பெற்றிருத்தல் அப்பிணிசாந்தமாய் நன்குசீவித்தற்கும் காரணமாதல் காண்க. (க0)

பித்தரோகம்.

குறைவிலோ ரேசனர் கதிரைக் கூடினு
மறையுமெட் டினிற்கதி ரனுக வோரையிற்
றுறையுறு நல்லர்நோக் கறினுந் தோன்றினேன்
பிறையுற னுதலினைப் பித்த ரோகியே.

(இ-ள்.) இலக்கினுதிபதி சூரியனேடு சகிதமானுலும், அட்டமத்திற் சூரியனிருக்க இலக்கினத்துக்குச் சுபதிருஷ்டி இல்லாதொழியினும் அக்காலத்துப் பிறந்தமகன் பித்தரோகியாவன். எ-று.

சீவத்தானுதிபதி பித்தக்கிரகமாகிய சூரியனேடு சகிதமாதலும், அச்சூரியன் மிருத்யுத்தானத்திருக்கச் சீவத்தானத்துக்குச் சுபக்கிரக திருஷ்டி இல்லாதொழிதலும் பித்தரோகியாதற்கேதுவாதல் காண்க.

முன் உடம்போடொழியும் பிணிகளைப் பொதுவகையாற் குறிப்பிக்குங் கோணிலை கூறினர்; இனி அவற்றைச் சிறப்புவகையாற் குறிப்பிக்குங் கோணிலை கூறுவான்றொடங்கி இதனுற் பித்தரோகியாதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (கக)

கயரோகம்.

நிறுவிய வோரைதா னீரி ராசியாய்க்
கறையுடைக் குறைமதி கடின ரோடுவக்
துறைதர வாறினி லுறையிற் றீப்வர்
பிறைநிகர் நுதலினைப் பெருங்கய ரோகியே.

(இ-ள்.) சலவிராசி உதயமாக அதில் அபரபக்கச் சந்திரன் குரூரக்கிரகங்களோடுகூடி வீற்றிருக்க, ரோகத்தானத்திற் குரூரக்கிரகங்களிருப்பின் அக்காலத்துப் பிறந்தமகன் கயரோகியாவன். எ-று.

வாத பித்த சிலேஷ்மங்கள் முறையே வாயுத் தேயுவப்புக்களை ஆதாரபூதமாக உடையனவாதலாற் சலராசி உதயமாக அதிற் சலக்கிரகமுந் தேககாரகனுமாகிய சந்திரன் பெலகீனனுய்க் கடினரோடிருத்தலும் ரோகத்தானத்திற் றீபவர் இருத்தலும் கயரோகியாதற் கேதுவாதல் காண்க. (கஉ)

உதித்திடு மோரைநல் லோர்க ணேக்கறத்
துதித்திடும் பொன்னுடன் பாபர் தோய்ந்துதா
மதித்திடு மெட்டினின் மருவிச் சார்ந்திடிற்
கதித்திடுங் கொடுங்கய ரோகங் காதுமே.

(இ-ள்.) உதயலக்கினத்துக்குச் சுபக்கிரகதிருஷ்டி இல்லாதொழிய, குரூரக்கிரகங்கள் குருவோடுகூடி மிருத்துத்தானத்திருப்பின் அக்காலத்துப் பிறந்தமகன் கயரோகியாவன். எ-று.

சலவிராசியென்பதறிவித்தற்கு "உதித்திடுமோரை" என்றுவிதந்தார். பாபர் என்றது ஈண்டுச் சனி பாம்புகளை. (கஙு)

நெருப்புச்சுரம்.

நிலமக னோரையை நெடிது பார்த்திடப்
புலவனைத் தீயவர் பொருந்தி யெட்டினி
னிலகிடு மிரண்டினி னிருப்ப வெய்திநேன்
றலமதிற் கனற்சுர ரோகஞ் சாருமே.

(இ-ள்.) அங்காரகன் இலக்கினத்தைப் பார்க்க, குரூரக்கிரகங்கள் புதனோடுகூடி எட்டாமிடத்திலேனும் இரண்டாமிடத்திலேனும் இருக்க அக்காலத்துப் பிறந்தமகன் கனற்சுரத்தாற் பீடிக்கப்படுவன். எ-று.

"பார்த்திட" என வாளாகூறாது "நெடிதுபார்த்திட" என்றுவிதந்தமையால் அங்காரகன் ரோகத்தானத்திற் பெலவீனனாயிருந்து சீவத்தானத்தைப்பார்க்க என்பது கருத்தாகக் கொள்க.

கனற்கிரகமாகிய அங்காரகன் ரோகத்தானத்திலிருந்து சீவத்தானத்தைப் பார்த்தலும், புதனோடு குரூரக்கிரகங்கள்கூடி மிருத்துத்தானத்திலேனும், மாரகத்தானமாகிய இரண்டாமிடத்திலேனும் இருத்தலும் நெருப்புச்சுரத்தாற் பீடிக்கப்படுதலைக் குறிப்பித்தல் காண்க. இதனால் நெருப்புச்சுரத்தாற் பீடிக்கப்படுதலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (கச)

பிரமேகரோகம்.

உசனனெட் டிரண்டினி னேங்க வோரைதா
னசைவிறீ யோர்மனை யாக வாதிபன்
பசையினீ சம்பகை யாசப் பாபர்நோக்
கிசையவோ ரையிற்பிர மேகமெய்துமே.

(இ-ள்.) சுக்கிரன் எட்டாமிடத்திலேனும் இரண்டாமிடத்திலேனும் வீற்றிருக்க, இலக்கினம் குரூரக்கிரக க்ஷேத்திரமாய்க் குரூரக்கிரகதிருஷடிபெற, இலக்கினாதிபதி சத்துரு நீச க்ஷேத்திரத்திருப்ப அக்காலத்துப்பிறந்த மகன் பிரமேகரோகியாவன். எ-று.

இதனாற் பிரமேகரோகியாதலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (௧௫)

வசூரி.

அரவுத யத்துற வார னேக்கிட
விரவுமெட் டாதிப னேழின் மேவிட
வரவுநீர்க் கருங்கட லுலகிற் றேன்றினேன்
மருமலர்க் கூந்தலாய் வசூரி கொல்வனே.

(இ-ள்.) இராகு இலக்கினத்திலிருக்க, அங்காரகன் அவ்விராகுவைப் பார்க்க, அட்டமத்தானாதிபதி சத்தமத்தானத்திருக்க அக்காலத்துப்பிறந்த மனுடன் வசூரியாற் கொல்லப்படுவன். எ-று.

இதுமுதல் ஐந்துசெய்யுளால் வசூரியாலிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (௧௬)

வேறு.

பண்புடை யோரையில் வெய்ய ருறச்சுபர் பார்வை பெருதநிப
னெண்பயி லாறினி லெட்டி லிராகுவொ டெய்தி யிருந்திடினும்
விண்பயில் பங்கு வுடன்பௌ மன்றிரி கோணம் விளங்கிடினும்
வண்புவி மீது பிறந்தவ னேந்து வசூரியின் யாளுவனே.

(இ-ள்) குரூரக்கிரகங்கள் இலக்கினத்திருக்க, இலக்கினாதிபதி சுபக்கிரகதிருஷ்டிபெருது இராகுவோடுகூடிச் சட்டாட்டமத்தானங்களில் இருப்பினும், அங்காரகன் சனியோடுகூடித் திரிகோண இராசிகளில் இருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் வசூரியாலிறப்பன்.எ-று

சத்துரு நீச மிலக்கின மன்னுறச் சட்டம மட்டம மீதினிலே
புத்தியி தீயரு றக்கலி யம்பௌ மன்விழி பொலிவுறினும்
பத்தியில் பாபரு டன்பிறை கண்டமு றக்குசன் பார்வையுயிர்க்
குய்த்திடி னுங்கொடி தானவ சூரியி னுள்ளுயிர் மாளுவனே.

(இ-ள்.) இலக்கினாதிபதி சத்துரு நீச க்ஷேத்திரத்திருக்க, குரூரக்கிரகங்கள் ரோக மிருத்துத்தானங்களிலிருக்க, இலக்கினம் அங்காரகனுடைய திருஷ்டிபெறினும்; சந்திரன் பாபக்கிரகங்களோடு சகிதயாய்க் கேந்திரமபெற்றிருக்க, அங்காரகன் இலக்கினத்தைப் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் வசூரியாலிறப்பன். எ-று. (௧௭)

சேயு மிலக்கின நாதனு மோர்மனை செவ்விதி னெய்தியிருந்
தேயு மிலக்கின மேல்விழி வைக்க விராகுவு மம்புலியும்
போயொ ரிடத்துற நல்லவர் பார்வை பொருந்துத லேத்தவிரின்
மாயு முதித்த மகன்றணி யாத வசூரியெ னும்பிணியால்.

(இ-ள்.) அங்காரகனும் இலக்கினாதிபதியுங் கூடி ஒருக்ஷேத்திரத்திற் பெலமாக வீற்றிருந்து இலக்கினத்தைப்பார்க்க, இராகுவுஞ் சந்திரனுங்கூடி ஒருக்ஷேத்திரத்திருக்க, சுபக்கிரகதிருஷ்டி அவர்களுக்கில்லாதொழியின் அக்காலத்துப் பிறந்தமகன் வசூரியினாலிறப்பன். எ-று

"சேயுமிலக்கினநாதனும்-இலக்கினமேல்விழிவைக்க" என்றாரேனும் ஏழாமிடமொழித்தொழிந்தவிடங்களினிருப்பின் இருவருளொருவர் இலக்கினமேல்விழிவைக்க என்பதே கருத்தாகக் கொள்க. ஏழாமிடப்பார்வை அங்காரகனுக்குப் பெலமில்லாமை சோதிடசாத்திரசித்தம். நல்லவர்பார்வைபொருந்துதலைத் தவிர்தல் சேயிலக்கினநாதர்களுக்கும், இராகுவம்புலிகளுக்குங் கொள்க. (௧௯)

சிறப்புறு மோரையி னதிபதி யாகிய செவ்வாய் பாபருட
னுறப்பக ராறுடை யான்பகை நீசம துற்றவ ரோடுபுக
மறப்பறு மாமதி யோரைநல் லோர்விழி வைப்பற மாநிலமேற்
பிறப்புறு மைந்தன் வசூரியி னைந்து பெருஞ்சம னூர்புகுமே.

(இ-ள்.) அங்காரகன் இலக்கினாதிபதியாய்க் குரூரக்கிரகங்களோடுகூடியிருக்க, ரோகத்தானாதிபதி சத்துரு நீச க்ஷேத்திரம்பெற்ற கிரகங்களோடு சகிதமாக, சந்திரனும் சீவத்தானமும் சுபக்கிரகதிருஷ்டி பெறாதொழிய அக்காலத்துப் பிறந்தமகன் வசூரியினாலிறப்பன். எ-று.

இரணரோகம்.

பாவிய ரானவ ரோரையி லேயிரு பார்வைசெ யப்பௌமன் [த்
மேவி யுரைக்கு மிரட்டைகொ ணான்கின் வியத்தின் விளங்கியிட
தாவியொ ரெட்டி னிரண்டினி லேசிகி சார்வுற நின்றிடுமே
லோவிய மொத்தமி னேயிர ணப்பிணி யுற்று வருந்திடுமே.

(இ-ள்.) இலக்கினத்தைக் குரூரக்கிரகங்கள்பார்க்க, அங்காரகன் அட்டமத்தானத்திலேனும் வியயத்தானத்திலேனும் வீற்றிருக்க, அட்டம துவிதியத்தானங்களிற் கேதுவிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் இரணரோகத்தால் வருந்தியிறப்பன். எ-று.

இதனால் இரணரோகத்தால் இறத்தலைக்குறிப்பிக்குங்கோணிலை கூறினார். (உ௧)

வாதரோகம்.

சனியுத யத்துற வாறிரு நாலிடை சந்திரன் வந்துபுகத்
துனியுறு மார விலக்கின மீது தொடர்ந்து விழித்திடவே
பனிதரு வாரிதி சூழ்புவி மேற்சிறு பால னுதித்திடுமே
லினியு மடக்கொடி வாத மெனும்பிணி யெய்துதல் சத்தியமே.

(இ-ள்.) சனி இலக்கினத்திலிருக்க, சந்திரன் சட்டாட்டமத்தானங்களிலிருக்க, அங்காரகன் இலக்கினத்தைப்பார்ப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் வாதரோகியாவன். எ-று.

தொடர்ந்து என்பதைத் தொடரவென்னும் எச்சத்திரிபாகக்கொண்டு அங்காரகன் இலக்கினத்தைப்பார்த்தலன்றி அதிலிருத்தலுங்கொள்க. இதுமுதன் மூன்றுசெய்யுளால் வாதரோகியாதலைக்குறிப்பிக்குங் கோணிலைகூறுகின்றார். (உஉ)

காரி யிலக்கின வாதிப னுபுபி ரைந்து தலந்துறைபச்
சிரிய ரைத்தவிர் தீய ரிலக்கின மீது செறிக்கவிழி
யிரிய நற்கலை சார்மதி யத்துட னின மடுத்திடவே
பாரி லுதித்தவன் வாத மெனும்பிணி யாலுயிர் பாறுவனே.

(இ-ள்.) சனி இலக்கினாதிபதியாய் அவ்விலக்கினத்திலேனும் ஐந்தாமிடத்திலேனும் இருக்க, சுபக்கிரகசம்பந்தம்பெறாத குரூரக்கிரகங்கள் இலக்கினத்தைப்பார்க்க, சந்திரனோடு குரூரக்கிரகங்கள் சகிதமாக அக்காலத்துப்பிறந்தமகன் வாதரோகத்தாலிறப்பன். எ-று.

"சிரியரைத்தவிர் தீயரிலக்கினமீது செறிக்கவிழி" என்பதற்குச் சுபக்கிரகங்கள் பாராதொழியக் குரூரக்கிரகங்கள் பார்க்க என்றுபொருள்கோடலும் ஒன்று. (உ௩)

காரர வம்வரு மோரை புகுந்திட நல்லவர் கண்செயலந்
நிரம றும்பல தீயவர் கண்செய வெட்டினி லாறுதனிற்
கோரமு றுஞ்சனி யெய்திட வந்த குமாரன் மடவாளே
யாரமு தந்தனை யுண்கினும் வாத மடுத்துயிர் மாளுவனே.

(இ-ள்.) இராகு இலக்கினத்திலிருக்க, அவ்விராகுவைச் சுபக்கிரகங்கள் பாராது பல குரூரக்கிரகங்கள் பார்க்க, சட்டாட்டமத்தானங்களிற் சனியிற்றிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் வாதரோகத்தாலுயிர்துறப்பன். எ-று. (உச)

குட்டரோகம்.

ஏறிய வில்லெழு மோரையதாக விராகு விருந்திடவே
யாறில் வியாழ னமர்ந்திட வாதிபன் கேந்திர மணுகியிட [ன்
மாறில் புவிக்கிடை தோன்றிய மைந்தன் வபங்கெழு குட்டமுட
றேறு தரித்திர மற்றுள நோய்மல டாகுவன் றேமொழியே.

(இ-ள்.) தனுசு உதயலக்கினமாக அதில் இராகுவிற்றிருக்க, ரோகத்தானத்திற் குருவிருக்க, ரோகத்தானாதிபதி கேந்திரத்தானத்திற் பெலமுற்றிருக்க அக்காலத்துப் பிறந்தமகன் குட்டரோகமும், அதுபோலும் பிறரோகங்களும், தாரித்திரியமும் மலடாந்தன்மையுமடைந்து வருந்தியிறப்பன். எ-று.

குருவின் மூலத்திரிகோண இராசியாகிய தனுசுதயமாக அதில் இராகுவிருத்தலும், சீவக்கிரகமும் சீவத்தானுதிபதியும் புத்திரகாரகனும் சகலபாக்கியகாரகனுமாகிய அக்குரு ரோக துக்க தாரித்திரியாதிதுர்த்தானமாகிய சட்டமத்தானத்திருத்தலும், சகலபோககாரகனுகிய சுக்கிரன் அச்சட்டமத்தானுதிபதியாய்க் கேந்திரத்திற் பெலமேறியிருத்தலும் குட்டரோகமுதலிய ரோகங்கட்கும் தாரித்திரியத்துவம் மலடாந்தன்மைகட்கும் காரணமாதல் காண்க. இதனுற் குட்டரோகமுதலியவற்ருல் வருந்தியிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். ()

சலரோகம், கயரோகம்.

நாலிடை நீலனு மாறிடைப் பாபரு நண்ண விலக்கினமன் [ச்
னோலுற வோரையைப் நோக்கிட மாமதி யிராகுவொ டெய்தியிட
சால் வவன்றனை நல்லவர் நோக்கறத் தாரணி வந்திடுவோன்
மாலுத வுஞ்சல மேய்கய ரோகமும் வந்துயிர் மாளுவனே.

(இ-ள்.) ஆரோக்கியத்தானத்திற் சனியும், ரோகத்தானத்திற் குரூரக்கிரகங்களும் இருக்க, சீவத்தானுதிபதி அச்சீவத்தானத்தைப்பார்க்க, சந்திரன் இராகுவோடு சகிதமாக, அச்சந்திரனைச் சுபக்கிரகங்கள் பாராதொழிய அக்காலத்துப்பிறந்தமகன் கயரோகமேனுஞ் சலரோகமேனுமடையப்பெற்றுயிர் துறப்பன். எ-று.

நாலிடை நீலனுறுதல் ஆரோக்கிய மிழத்தற்கும், ஆறிடைப்பாபருறுதல் ரோகமுளவாதற்கும்,இலக்கினமன் ஓரையைநோக்குதல் நீடித்துழத்தற்கும், மதியிராகுவொடெய்தி நல்லவர்நோக்கறல் சலசம்பந்தரோகமுளவாதற்குங் காரணமாதல் காண்க. இதனுற் சலரோக கயரோகங்கள் உளவாதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (உசா)

குய்யரோகம்.

வேறு.

இலகு சந்திர னெட்டினி லாறினிற்
றீய ரோடுடுத் தெய்தக்
குலவு மட்டமா திபன்றனை யிராகுவுங்
கொடிய கேதுவும் பார்க்க
வுலகி லுற்பவஞ் செய்திடு மானவன்
குய்ய ரோகமுற் றேய்வன்
கலக வாள்விழித் துடியிடைப் பிடிநடைக்
காதன் மென்மொழி யாளே.

(இ-ள்) சந்திரன் சட்டாட்டமங்களிற் குரூரக்கிரகங்களோடுகூடியிருக்க, அட்டமத்தானுதிபதியை இராகுகேதுக்கள்பார்க்க அக்காலத்துப்பிறந்தமகன் குய்யரோகத்தால் வருந்தியிறப்பன். எ-று.

குய்யம்-அந்தரங்கஸ்தானம். தேகசுககாரகனுகிய சந்திரன் முறையே ஸ்திரீசங்கம ரோகத்தானமும் இரணத்தானமுமாகிய சட்டாட்டமத்தானங்களிற் குரூரக்கிரகசகிதம்பெற்றிருத்தலும், இரணத்தானுதிபதியை அக்காரகர் பார்த்தலும் குய்யரோகமுறுதற் கேதுவாதல் காண்க. இதனுற் குய்யரோகமுறுதலைக் குறிப்பிக்குங்கோணிலை கூறினுர். (உஎ)

குன்மரோகம்.

வன்மங் கூர்சனி யோரையி னெய்திட
    மங்கு தேய்மதி வந்து
கன்மந் தீயரைக் கூடவா றெட்டினிற்
    கொடிய வர்கலந் தோங்கச்
சென்மந் தாரணி மேற்செயு பானுடன்
    செழும ருந்தினிற் றீராக்
குன்மத் தானுயிர் வாடுவன் வாடிய
    கொடியெ னுமிடை மாதே.

(இ-ள்.) சீவத்தானத்திற் சனியிருக்க, அபரபக்கச் சந்திரன்வந்து குரூரக்கிரகங்களோடு சகிதமாக, சட்டாட்டமத்தானங்களிற் குரூரக்கிரகங்கள் இருக்க அக்காலத்துப்பிறந்தமகன் குன்மரோகத்தாற் பீடிக்கப்பட்டு உயிர்துறப்பன். எ-று.

வந்துகன்மந் தீயரைக்கூட என்றதனுல் அச்சந்திரன் சனியுந் தானும் மற்றுங் குரூரக்கிரகங்களோடு கூடி இலக்கினத்திருப்ப என்றும், கலப்பவென்னுது கலந்தோங்க என்றதனுல் ரோகத்தானுதிபதி இரண்டாமிடத்திருக்க என்றும் பொருளுரைத்து அதுவுங் குன்மரோகத்தைக் குறிப்பிக்கும் யோகமாதல் காண்க. இதனுற் குன்மரோகமுறுதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினுர். (உஅ)

குட்டரோகம்.

இணங்கு மோரைக்கோ னிராகுவைக் கூடிட
    வல்ல தேழினி லெய்த
வணங்கு சேர்சனி யெட்டுறி னுந்திய
    வனைச்சு னனணைந் தானு
முணங்கு சேயவற் கூடித்தேள் சுறுக்குளிர்
    கயலின் கூறுற் றுலுந்
சுணங்கு பூத்தொளிர் முலையினுய் குட்டநோய்
    தொடரு மென்றிது சொல்லே.

(இ-ள்.) சீவத்தானுதிபதி இராகுவோடு சகிதமாக, அன்றிச் சத்தமத்தானத்திருக்க, சனி மிருத்துத்தானத்திருப்பினும், அன்றிக் குரூரக்கிரகங்களோடு சகிதம்பெறினும், அங்காரகன் சனியோடுகூடி விரு

ச்சிகம், மகாம், கர்க்கடகம், மீனம் என்னும் இந்நான்கு அங்கிசங்களுள் ஒன்றுபெற்றிருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் குட்டரோகத்தாற் பீடிக்கப்பட்டிறப்பன். எ-று.

இணங்குமோரைக்கோன் என்று விதந்தமையால் சீவத்தானுதிபதி இராகுவோடுங் கூடிச் சீவத்தானத்திலேனும் சத்தமத்தானத்திலேனும் இருக்க என்றும் பொருளுரைத்துக்கொள்க. தீயவன் தியவன் எனக் குறுகிநின்றது. சுஉன் என்புழி அன் சாரியை. இதனுற் குட்டரோகத்தைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (உகூ)

வெருரோகம்.

வேலை யாகிய வோரையி னதிபதி
வலிமை குன்றிட மிக்க
நாலை யோர்களும் பாம்பிடம் பிடித்திடத்
தீயர் பார்வையி னண்ணில்
வாலை யாம்வய தினிற்பல நோயினுன்
மயங்கு வான்மணஞ் சேர்ந்த
சோலை யாமெனப் பூக்களு மாக்களுஞ்
சூழ்ந்தி டுங்குழ லாளே.

(இ-ள்.) சீவத்தானுதிபதி பெலகீனமாயிருக்க, ஆரோக்கியத்தானத்தில் இராகுவீற்றிருக்க, துவிதீயத்தானத்திற் குரூரக்கிரகங்கள் இருப்பின் அக்காலத்துப் பிறந்தமகன் பாலியத்திலேயே வெகுரோகங்களால் வருந்தியிறப்பன். எ-று.

நான்காமிடம் ஆரோக்கியத்தானமாதலால் அதனதின்றியமையாமைதோன்ற "மிக்கநாலு" என்றும், ஆரோக்கியமுற்றுமிழ்த்தல் ஒருதலை என்பதுதோன்ற "இடம்பிடித்திட" என்றுங்கூறினர். பார்வை என்றது ஈண்டுத் துவிதீயத்தானத்தை. இதுமுதலிரண்டுசெய்யுளால் வெகுரோகமுற்றிறத்தலைக் குறிப்பிக்குங்கோணிலைகூறுகின்றார்.

3916

தடங்கொள் சந்திர னெட்டினி லாறினிற்
றயங்க வாறெனச் சாற்று
மிடங்கொள் கொற்றவன் கேந்திரம் பெற்றிட
விலங்கு லக்கினந் தன்னின்
முடங்கொ ணீலனு ரிருந்திடத் தோன்றினோன்
முழுப் பிணியுடை யோனும்
வடங்கொள் பூண்முலைக் குடங்களாற் றினந்தினம்
வாடு நுண்ணிடை யாளே.

(இ-ள்.) சனி சீவத்தானத்திருக்க, சந்திரன் மிருத்து ரோகத்தானங்களுள் ஒன்றிலிருக்க, ரோகத்தானுதிபதி கேந்திரம்பெற்றிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் வெகுரோகங்களாற் பீடிக்கப்பட்டு உயிர்துறப்பன். எ-று. (ஙக)

பில்லி, சூனியம்.

கூறி லக்கினம் பாபியர் பார்த்திட
 வெட்டு ளோன்வலி குன்றப்
பாறி லட்டமஞ் சனீச்சுரன் பார்க்கினும்
 பத்தி னுக்கிறை யேகி
யாறில் பன்னிரண் டுறக்குச னோரையை
 விழிக்க வாறினின் மன்னன்
வீறி லக்கின மருவினும் பிறர்புரி
 வினையத் தான்மெலி வானே.

(இ-ள்.) சீவத்தானத்தைக் குரூரக்கிரகங்கள் பார்க்க, ஆயுர்த்தானாதிபதி பெலஹீனனாக, ஆயுர்த்தானத்தைச் சனிபார்ப்பினும், கன்மத்தானாதிபதி வியயத்தானத்திற்சென்றிருக்க, அங்காரகன் சீவத்தானத்தைப் பார்க்க, சத்துருத்தானாதிபதி சீவத்தானத்திருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் சத்துருக்கள்செய்யும் பில்லிசூனியம் முதலிய வஞ்சனையால் வருந்தியிறப்பன். எ-று.

இதுமுதன் மூன்றுசெய்யுளாற் சத்துருக்கள்செய்யும் பில்லிசூனியமுதலிய வஞ்சனையால் வருந்தியிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (௩௨)

சேயு நீலனு மோரையை நோக்கவா
 றுடையான் கேந்திரஞ் சேரு
மாயி னுங்குச னிலக்கின திபனுட
 னாக வல்லது செவ்வாய்
மேய கேந்திர முற்றிட வாறுளோ
 னோரை யில்விரைந் துறினு
மேயு மிப்புவி பிறந்தசேய் பிறர்புரி
 வஞ்சத் தாலிட ரெய்தும்.

(இ-ள்.) அங்காரகனுஞ் சனியும் சீவத்தானத்தைப்பார்க்கச் சத்துருத்தானாதிபதி கேந்திரம்பெற்றிருப்பினும், அங்காரகன் சீவத்தானாதிபதியோடு சகிதமாக அல்லது கேந்திரம்பெற்றிருக்க, சத்துருத்தானாதிபதி சீவத்தானத்திருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் சத்துருக்கள்செய்யும் பில்லிசூனியமுதலிய வஞ்சனையால் வருந்தியிறப்பன். எ-று. (௩௩)

கல்வி யஞ்சர மாகவா றதிபதி
 யோரை யைக்கலப் பச்சே
யொல்லு மொன்பதி லாயத்திற் புகவல
 துபய ராசியி லேழிற்

புல்லி னும்வெகு வஞ்சனை புகும்புக
லோரை தானவக் கேது
மெல்ல வேறிடக் கேந்திரங் குளிகனோ்
மேவில் வஞ்சனை மேவும்.

(இ-ள்.) சீவத்தானஞ் சரவிராசியாக அதிற் சத்துருத்தானாதிபதி வீற்றிருக்க அங்காரகன் தன்பத்தானத்திலேனும் லாபத்தானத்திலேனும் இருப்பினும், அல்லது போகத்தானம் உபயவிராசியாக அதிலிருப்பினும், சீவத்தானத்திற் கேதுவிருக்கக் குளிகன் கேந்திரம்பெற்றிருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் சத்துருக்கள்செய்யும் பில்லிசூனிய முதலிய வஞ்சனையால் வருந்தியிறப்பன். எ-று.

"ஓரைதானவங்கேதுமெல்லவேறிடில்" என்றும் பாடபேதம் உண்டு. அதற்கு இலக்கினத்திலேனும் நான்காமிடம் ஒன்பதாமிடங்களிலேனுங் கேது வீற்றிருப்பினும் என்று பொருளுரைத்துக்கொள்க.

துஷ்டதேவதை, பசாசு இவற்றற் பீடை.

அடுக்க நீள்சர மோரையாய்ச் சேயுற
வோரைக் காதிபன் கூட
விடுக்கட் பாபிய ரிருப்பினு மிலக்கி
னஞ்சுப ரிருந்திட வேழில்
வடுக்கொ டுஞ்சனி யிருந்திட மதியினைத்
தீயர் பார்ப்பினும் வந்தோன்
மிடுக்கு மேவிய தேவராற் பசாசினால்
வீவ துதிட மாமே.

(இ-ள்.) சீவத்தானஞ் சரவிராசியாய் அதில் அங்காரகன் வீற்றிருக்கச் சீவத்தானாதிபதியோடு குரூரக்கிரகங்கள் சகிதமாயினும், சீவத்தானத்திற் சுபக்கிரகங்களிருக்கப் போகத்தானத்திற் சனிவீற்றிருக்கத் தேகசுககாரகனாகிய சந்திரனைக் குரூரக்கிரகங்கள் பார்ப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் துஷ்டதேவதைகளாலேனும் பைசாசங்களாலேனும் நொந்திறத்தல் நிச்சயமாம். எ-று.

இதனால் துஷ்டதேவதை பசாசு இவற்றாற் பீடிக்கப்பட்டிறத்தலைக்குறிப்பிக்குங் கோணிலைகூறினார். (ரு௫)

பிணி, தரித்திரம், க்ஷயரோகம்.

வேறு.

பருதி யோரையிற் றனி ருக்கவே
பாபர் முன்னினும் பின்னி னும்புகக்
கருது மாறினு மெட்டி னுங்கொடுங்
கடிய ரெய்தவே வந்த காதலன்

பெருகு பாலியந் தன்னி லேபெரும்
 பிணியி னுன்மிகப் பீடை யெய்தியே
வருத ரித்திரங் குய்ய ரோகமு
 மருவி நித்தமும் வாடு வானரோ.

(இ-ள்.) சீவத்தானத்திற் சூரியனிருக்க, அச்சூரியனுக்கிருமருங்கினும் ரோக மிருத்துத்தானங்களிலுங் குரூரக்கிரகங்களிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் பாலியத்திலேயே பெரும்பிணியினுற் பீடிக்கப்பட்டுத் தாரித்திரியமுங் குய்யரோகமுமுற்றுப் பிரதிதினமும் வருந்தியிறப்பன். எ-று.

எதுகைநோக்கிப் பரிதி பருதியென்ருயிற்று. இதனுற் பிணி தரித்திரங் குய்யரோகம் என்னுமிவற்ருனுண்டிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (௩௬)

நிதி, ஆடை, ஆயுள்.

உதய நாதனத் துச்ச மாகவே
 யோரை மீதினிற் றாயர் மேவிடச்
சிதைவி லாமுழுப் பார்வை செய்யவெண்
 டிங்கள் கேந்திரந் திகழ வந்துளோன்
றதையு நாண்மலர்த் தாம மோடகிற்
 ருவு தூமமுஞ் சாரு யோதியாய்
நிதியு மாடையு மாயு ளானது
 நிறைய வெய்தியே நீடு வாழ்வனே.

(இ-ள்.) சீவத்தானதிபதி உச்சக்ஷேத்திரத்தில் அதியுச்சபாகையில் வீற்றிருக்க, சீவத்தானத்திற் சுபக்கிரகங்களிருந்தலேனும் பெலமாகப்பார்த்தலேனுஞ் செய்ய, பூரணசந்திரன் கேந்திரம்பெற்றுவிளங்க அக்காலத்துப்பிறந்தமகன் பொன்னும் புடைவையும் ஆயுளும் நிறையப்பெற்றுச் சிரஞ்சீவியாவன். எ-று.

இதனுல் நிதியாடையாயுட்களின் விருத்தியைக்குறிப்பிக்குங்கோணிலை கூறினர். (௩௭)

முதலாம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௭௨.

இரண்டாம்பாவம்.

தனச்சேதம்.

பன்னி ரண்டினின் மூவி ரண்டினிற்
பகரி ரண்டினுக் குரிய னெயதினுந்
துன்னி ரண்டினிற் பன்னி ரண்டுளோன்
றெருக்கு யேவினுந் தூய வாமென
மன்னன் மூவிரண் டாறி ரண்டுடன்
மருவு நாலிரண் டதனில் வைகினு
மின்னல் வந்திடும் பொருள்கள் சேதமா
யென்று மெய்துமே யின்மை யென்பதே.

(இ-ள்.) தனத்தானாதிபதி வியயத்தானத்திலேனும் தாரித்திரியத்தானத்திலேனும் வீற்றிருப்பினும், வியயத்தானாதிபதி தனத்தானத்திற்புகுந்திருப்பினும், தனகாரகனாகியகுரு இச்சாதகனது பூர்வபுண்ணியக்குறைவால் இத்தானங்களே நமக்குத் தூயதானங்களென்று தூர்த்தானங்களிலிருப்பினும், அக்காலத்துப்பிறந்தமகனுக்கு மனக்கிலேசமுண்டாகும், முன்னுள்ள தனங்கள் சேதமாய் எக்காலத்தும் தாரித்திரியமே அவனைச்சார்ந்து வருத்தும். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன: தனம், குடும்பம், நேத்திரம், வாக்கு, வித்தை, சாஸ்திரவிசாரம், செல்வம், முகம் முதலியனவாம். இதுமுதலிரண்டுசெய்யுளாற் றனச்சேதத்தைக்குறிப்பிக்குங் கோணிலைகூறுகின்றார். (க)

சாற்றி டேந்தனத் தான வாதிபன்
றனது நீள்வலித் தகைமை குன்றவே
போற்று கின்றதோர் பன்னி ரணிடினிற்
புலவ னார்தொழுங் குரவன் வைகவே
யூற்ற முற்றதற் கால வோரையு
நல்லர் பார்வைதா னென்றி டாதுறத்
தோற்ற முற்றுளோற் குரிய மென்பொருட்
டொகுதி யாவையுந் தொலையு மென்பவே.

(இ-ள்.) தனத்தானாதிபதி தனத்தை விருத்திசெய்தற்குரிய தன் பெலமுழுதுமிழந்திருக்க, தனகாரகனாகிய குரு வியயத்தானத்திருக்க, சகலபோகங்களுக்குமுரிய லக்கினமும் சுபக்கிரக திருஷ்டிபெறாதொழிய அக்காலத்துப்பிறந்தமகனுக்கு முன்னுள்ள தனத்திரண்முழுதும் வியயமாய்த் தாரித்திரியம் அவனை மிகுதியும் வருத்தும். எ-று. (உ)

தனச்செல்வன்.

இரண்டி னுதிப னுய மெய்தவவ்
விறைவ னுருவக் திரண்டி னெய்தினு
மரண்ட ரும்பெருங் கேந்தி ரத்திவ
ரணுகி னுந்திரி கோண மாகவே
முரண்ட ராதிரண் டுடைய னெய்திட
மொழியி ரண்டினிற் சுபரி ருப்பினுந்
திரண்டெ ழுந்தனச் செல்வி யேயவன்
றிரண்டெ ழுந்தனச் செல்வ னுவனே.

(இ-ள்.) தனத்தானுதிபதி லாபத்தானத்தில் வீற்றிருக்க லாபத்தானுதிபதி தனத்தானத்திருப்பினும், தனத்தானுதிபதியும் லாபத்தானுதிபதியுங் கேந்திரம்பெற்றிருப்பினும், தனத்தானுதிபதி திரிகோணத்திருக்கத் தனத்தானத்திற் சுபக்கிரகங்களிருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன்றனச்செல்வனுவன். எ-று.

லாபத்தானுதிபதி எந்தெந்தப்பாவத்திலிருப்பினும் அந்தந்தப்பாவத்துக்கு விருத்திசெய்தலின் அவ்வுயர்வுபற்றி "இறைவனுர்" என்ருர். "உவந்திரண்டினெய்த" என்றதனுல் அது உச்ச சுவ மித்துரு க்ஷேத்திரங்களுள் ஒன்ருதல் பெறப்படும். இதுமுதல் இரண்டுசெய்யுளாற் றனச்செல்வனுதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறுகின்ருர். (ந)

ஆய மானபன் ஞென்றி னுதிப
னழுகு சேர்தரு மிரண்டி னுதிப
னேய மேவினுங் காணி மேவினு
நிகழு முச்சமாய் நேர நிற்பினும்
போயி லக்கினங் கேந்தி ரந்திரி
கோண மெய்தினும் புவியி னெய்திஞேன்
றூய நன்னிதித் தலைவ னென்னவே
சொல்ல லாம்பெருஞ் செல்வ னுவனே.

(இ-ள்.) லாபத்தானுதிபதியும் தனத்தானுதிபதியும் மித்துரு சுவ உச்ச க்ஷேத்திரத்திற் றனத்தை விருத்திசெய்தற்கு யோக்கியராய்நிற்பினும், அன்றி இலக்கினத்திலேனுங் கேந்திர திரிகோணங்களிலேனும் புகுந்து அங்ஙனமிருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் குபேரனே இவனுக்கொப்பாவன் என்று சொல்லத்தக்க தனச்செல்வனுவன். எ-று.

மந்திரி.

மெச்சி ரண்டினு மொன்ப தின்கணும்
விளங்கு மாதிபர் கேந்தி ரங்களா
யுச்ச முற்றிலக் கினத்தை நோக்கவே
புலக மீதுவந் துற்ற பாலக

னச்ச மற்றவே லரசர் நண்புகூ
    ரரிய மந்திரித் தொழின டத்துவ
னிச்சை யுற்றசெல் வத்தின் மந்திரிக்
    கிவனை யல்லதா ருவமை சொல்வரே.

(இ-ள்.) தனத்தானாதிபதியும் பாக்கியத்தானாதிபதியும் கேந்திரம் பெற்று உச்சக்ஷேத்திரத்தில் அதிபெலமுற்று வீற்றிருந்து சீவத்தானத்தைப் பார்க்க அக்காலத்துப் பிறந்தமகன் அரசர்களையடுத்து அவர்களுக்கு நண்புமிகுந்த மந்திரியாய்ச் சீவிப்பன்; செல்வப்பெருக்கத்தால் இம்மந்திரிக்கு இவனையேயன்றி வேறு யாரை உவமை சொல்வர். எ-று.

இதனால் மந்திரியாதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (௫)

இராஜசமானன்.

ஐயி ரண்டினுக் கதிப னட்சிகட்
    பரிய கேந்திரத் துச்ச மாயினு
மெய்யி ரண்டிலக் கினம தாயினு
    மேதை பொன்புகர் காண நிற்பினு
மையி ரண்டிலக் னேச னேடிவ
    ரனுகி னுந்திரி கோண நண்ணினுங்
கையி ரண்டெடுத் துலகெ லாந்தொழுங்
    காவ லர்க்கரு காளி யாவனே.

(இ-ள்.) கன்மத்தானாதிபதி கேந்திரம்பெற்று உச்ச சுவ மித்துரு க்ஷேத்திரத்தில் அதிபெலமுற்று வீற்றிருப்பினும், அன்றித் தனத்தானத்திலேனும் சீவத்தானத்திலேனும் அங்ஙனமிருப்பினும், அன்றிப் புத குரு சுக்கிரர்களது திருஷ்டிபெற்று அங்ஙனமிருப்பினும், அன்றிப் புத குரு சுக்கிரர்கள் கன்மத்தானாதிபதியோடேனும் சீவத்தானாதிபதியோடேனும் சகிதம்பெறினும், அன்றி அம்மூவரும் திரிகோண இராசிகளிற் பெலமுற்று வீற்றிருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் இராஜசமானனாவன். எ-று.

இதனால் இராஜசமானனாதலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (௬)

இரண்டாம்பாவம் முற்றிற்று.

ஆ. செய்யுள் எ௪.

மூன்றாம் பாவம்.

சகோதரரின்மை.

மூன்று ளோன்பகை நீச மாகவம்
　　மூன்றிற் றியவ ரெய்த நோக்குறச்
சான்ற நல்லர்நோக் கில்லை யாயினுந்
　　தக்க மூன்றினுக் குடைய னுறினிற்
றேன்று பன்னிரண் டெட்டி னெய்திடச்
　　சுபரொ ழிந்துளோர் பார்க்க மைந்தனை
யீன்ற வன்னைதான் பின்னை மைந்தரை
　　யின்றி டாளிதற் கைய மில்லையே.

(இ-ள்.) சகோதரத்தானதிபதி சத்துரு நீச க்ஷேத்திரத்திருக்க, சகோதரத்தானத்திற் குரூரக்கிரகங்கள் இருத்தலேனும் திருஷ்டியே னுஞ்செய்ய, சுபக்கிரகதிருஷ்டி அதற்கில்லாதொழியினும், சகோதரத் தானதிபதி சட்டாட்டமவியயத்தானங்களிலிருக்கக் குரூரக்கிரகங்கண் மாத்திரம் அதைப்பார்ப்பினும் அக்காலத்துப் புத்திரனைப்பெற்ற தாய் இப்புத்திரனுக்குப்பின் புத்திரர்களைப் பெறமாட்டாள்; இது நிச்சயம். எ-று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: சகோதரம், போகம், கன்னபூஷணம், வீரியம், போசனபாத்திரம் முதலியனவாம். இதனாற் சகோதரரின்மையைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (க)

சகோதரவிருத்தி.

கிளரு முச்சாட் பாட்சி யுற்றுநன்
　　கேந்தி ரந்திரி கோண மெய்தினுந்
தளர்வி லாதநல் லவர்கள் பார்த்திடச்
　　சாரு மூன்றினிற் றலைவ னெய்தினும்
வளரு மிப்புவிக் கிடையு திக்குமோன்
　　வளர்ச கோதர மிகுதி சேர்வனு
லொளிப முத்தபொற் குழையி ரண்டினு
　　மோடி யோடிநின் றுலவு கண்ணியே.

(இ-ள்.) சகோதரத்தானதிபதி கேந்திரதிரிகோணங்களில் உச்ச சுவ மித்துரு க்ஷேத்திரத்தான பெலமடைந்து வீற்றிருப்பினும், பெலமேறிய சுபக்கிரகங்களாது திருஷ்டிபெற்றுச் சகோதரத் தானத்திருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் சகோதரவிருத்தியையுடையனுவன். எ-று.

இதனாற் சகோதரவிருத்தியைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (உ)

சகோதரநாசம்.

கொடியர் மூன்றினிற் குடியி ருந்திடக்
 கோதி லாதவத் தான வாதிப
னெடிய கேந்திரத் தெய்தி னுந்திரி
 கோண மென்னுமந் நிலையி னிற்பினு
மொடியி னல்லர்தம் பார்வை யில்லெனி
 னுவல்ச கோதர மாயு தித்துப்பின்
மடியு மிக்கசந் திரனை யொத்திடும்
 வடிவ மெய்திய வதன மங்கையே.

(இ-ள்.) சகோதரத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, சகோதரத்தானாதிபதி கேந்திரத்திலேனுந் திரிகோணத்திலேனு மிருக்கச் சுபக்கிரகதிருஷ்டி அவற்கில்லாதொழியின் அக்காலத்துப் பிறந்தமகனுக்குச் சகோதரர் பிறந்திறப்பர். எ-று.

சகோதரத்தானாதிபதி பெலகீனனாகச் சகோதரத்தானங் குரூரக்கிரகங்களின் சகிதமேனுந் திருஷ்டியேனும் பெற்றுச் சுபக்கிரகதிருஷ்டி பெறாதொழிதலும், சகோதரத்தானாதிபதி துர்த்தானமெய்திக் குரூரக்கிரக திருஷ்டிமாத்திரம் பெறுதலும் சகோதரரின்மையையும்; சகோதரத்தானாதிபதி கேந்திர திரிகோணங்களில் அதிக பெலமுற்று வீற்றிருத்தலும், அன்றிப் பெலமேறிய சுபக்கிரகங்களின் திருஷ்டி பெற்றுச் சகோதரத் தானத்திருத்தலும் சகோதர விருத்தியையும்; சகோதரத்தானங் குரூரக்கிரகங்களின் சகிதம்பெற்றுப் பெலகீனமடைய அத்தானாதிபதி கேந்திர திரிகோணங்களிற் சுபக்கிரக திருஷ்டி பெறாது வீற்றிருத்தல் சகோதரநாசத்தையுங் குறிப்பித்தல் காண்க. இதனாற் சகோதரநாசத்தைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (௩)

மூன்றும்பாவம் முற்றிற்று.

3916

ஆ செய்யுள் ௮௧.

நான்காம்பாவம்.

மாதிராரிஷ்டம்.

திங்க ளொலினிற் றங்க வன்னவற்
 றீயர் பார்த்திடச் சேரு நாலுளோன்
பொங்கு நீசநீள் பகையி னெய்தினும்
 பொருவில் சந்திரன் றீய ரோடுறப்
பங்க முற்றமூன் றைந்தி னிற்கொடும்
 பாப ரெய்தநா லாதி நீசமாய்
மங்கி டப்பகை யோரை மேவினு
 மைந்த னைப்பயர் தாண்ம ரிப்பளே.

(இ-ள்.) மாதிருகாரகனாகிய சந்திரன் மாதிருத்தானத்திருக்க, அச்சந்திரனைக் குரூரக்கிரகங்கள் பார்க்க, மாதிருத்தானாதிபதி சத்துரு நீசக்ஷேத்திரத்திருப்பினும்; சந்திரன் குரூரக்கிரகங்களோடு சகிதமாக, மூன்றாமைந்தாமிடங்களிற் குரூரக்கிரகங்களிருக்க, மாதிருத்தானாதிபதி சத்துருநீச க்ஷேத்திரத்திருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகனைப் பெற்ற மாதா நீடித்துவாழாது விரைந்து மரிப்பள். எ-று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: மாதிரு, கிரகம், வாகனம், பூஸ்திதி, ஆரோக்கியம், சுற்றம், பாற்பசு, கீர்த்தி, வித்தை முதலியனவாம். காரகர் காரகத்தானத்திருத்தல் அக்காரகத்துக்குப் பங்கமாமென்பது "திங்களொலினிற்றங்க" என்றதனாலுமறிக. இதுமுதன் மூன்றுசெய்யுளான் மாதிராரிஷ்டத்தைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (க)

வேறு.

நாலான விடங்கொடியோ ருறமதியங் கொடியோர்க்கு நடுவி னெய்த
மேலானோர் நோக்கறினு நாலதிபன் பன்னிரண்டெட் டாறின் மேவிப்
பாலான வலிகெடினு மலதிரவி குசனொலிற் பயின்றிட் டாலு
மாலால மெனும்விழியா யம்மகவின் றாய்மரண மடைகு வாளே.

(இ-ள்.) மாதிருத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, சந்திரன் குரூரக்கிரகங்கட்கிடையே வீற்றிருக்க, மாதிருத்தானத்துக்குஞ் சந்திரனுக்குஞ் சுபக்கிரகதிருஷ்டியில்லாதொழியினும், மாதிருத்தானாதிபதி சட்டாட்டமவியயத்தானங்களிற் றன்பெலமிழந்திருப்பினும், சூரியனும் அங்காரகனுங் கூடி மாதிருத்தானத்திருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகனைப்பெற்ற மாதா விரைந்து மரிப்பள். எ-று. (உ)

இச்நான்கி னதிபதிசத் துருநீசம் பெற்றுவலி யிழந்தோ னாகப்
பின்னான மதிநலிந்து பேசிடுமீ ராறதனிற் பிறங்கி னாலும் [றி
பன்னாளுங் கொடியவர்நா லணுகிடினும் புவியினிடைப்பாலன் ேறன்
னன்னாவோவென்றசொல்லு மறியுமுன்னந் தாய்மரணமடைகுவாளே.

(இ-ள்.) மாதிருத்தானாதிபதி சத்துருநீசக்ஷேத்திரத்திற்றன்பெல மிழந்திருக்க, அபரபக்கச் சந்திரன்சென்று வியயத்தானத்திற்றன் வலிகுன்றியிருப்பினும், அன்றிக் குரூரக்கிரகங்கள் மாதிருத்தானத்திருப்பினும் அக்காலத்தொருமகன் பிறப்பின் அவன் "அன்னாவோ" என்ற வார்த்தையைத்தானும் பயின்றறிதற்குமுன் அவன்றாய் மரிப்பள். எ-று.

"பன்னாளுங்கொடியவர்" என்றது சனி, பாம்பு, அங்காரகன், சூரியன் என்னுமிவர்களை; குரூரருள் சனி ராகுக்களோடு கூடுங்காற் குருவும், எல்லாக் குரூரரோடுங் கூடுங்காற் புதசந்திரரும் குரூரராக நினைக்கப்படுதலின் இவர்களைப் "பன்னாளுங்கொடியவர்" என்றார். ()

மாதிரு தீர்க்காயுசுடையள்.

குற்றமிலா னிருப்ப வதிபதிநட் பாட்சிதிரி கோணங் கண்டம், பற்று
டையுச் சம்பெறினு மப்புவியை நல்லவர்கள் பார்க்க நல்லோர், சுற்று
டைக்கேந் திரத்தினிடைத் துலங்கிடினும்பழுதுபடாச்சுதனைத்தானே,
பெற்றவட்குப் பூரணமா மாயுளுண்டு செழுங்கமலப் பெண்ணா னாளே.

(இ-ள்.) மாதிருத்தானத்திற் சுபக்கிரகமிருக்க, மாதிருத்தானாதிபதி திரிகோண கேந்திரத்தானங்களில் உச்ச சுவ மித்திரு க்ஷேத்திரத்தான பெலமடைந்திருப்பினும், அன்றிச் சந்திரனைச் சுபக்கிரகங்கள் பார்க்க எல்லாக்கேந்திரங்களிலுஞ் சுபக்கிரகங்களிருப்பினும் அக்காலத்துப் பிறந்தமகனைப் பெற்றமாதாவுக்குப் பூரணவாயுசுண்டாம். எ-று.

இதனால் மாதிருவின் தீர்க்காயுசைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (௪)

கிரகமுள்ளவன்.

ஓதியநா லுடையவன்றா னோரையினி லுச்சமுற வோரை தன்னி
னாதிபதி தனலாப திரிகோண கேந்திரநட் பாட்சி யுச்சஞ் [டங்
சோதிமிகப் பெற்றிருக்கத் தோன்றுசுதன் றிசாபதியாய்த் துலங்குமா
தாதின்மிகு நறுங்கூந்தற் றிலதநுதன் மதிவதனத் தடங்க ணாளே.

(இ-ள்.) கிரகத்தானாதிபதி இலக்கினத்தில் உச்சபெலம்பெற்றிருக்க, இலக்கினாதிபதி தனலாப திரிகோண கேந்திரங்களில் உச்ச சுவ மித்திரு க்ஷேத்திரத்தான பெலமடைந்து வீற்றிருக்க அக்காலத்துப் பிறந்த மகனுக்குக் கிரகமானது அட்டதிக்குக்களிலுமுள்ள கிரகங்களுக்கெல்லாம் நாயகமாய் விளங்கும். எ-று.

இதனாற் கிரகமுளவாதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினார். ()

கிரகமில்லாதவன்.

காண்டகுரு நாலாமிடந்தான் சரராசி யாய்த்தீயர் கலப்ப வெட்டி
னுண்டகையைத் தினிலிருப்ப வாறுடையான் வீறுடையி ராறிலாதன்
மாண்டகுமா றிடையாதல் வதித்திடவே யிப்புவியில் வந்த மைந்த
னீண்டுறையு மில்லமில னென்றறிஞ ரிசைப்பர்விழி யேவி னாளே.

(இ-ள்.) கிரகத்தானஞ் சரவிராசியாய் அதிற் குரூரக்கிரகங்களிருக்க, மிருத்துத்தானாதிபதி பிதிர்பரம்பரைத் தானத்திருக்கச் சத்துருத்தானாதிபதி போக சயன சௌக்கியத்தானமாகிய பன்னிரண்டாமிடத்திலேனும் சத்துருத்தானத்திலேனும் வீற்றிருக்க அக்காலத்துப் பிறந்தமகன் இவ்வுலகத்திற் றான்வசித்தற்குக் கிரகமில்லாதவனாவன். எ-று.

இதனாற் கிரகம் இலதாதலைக்குறிப்பிக்குங் கோணிலைகூறினார். ()

பூஸ்திதியில்லாதவன்.

சேமிக்கு நாலுடையான் சத்துருநீ சத்தினிடைச் சேர வீரா
றாமட்ட தானமுள்ளான் றனத்தானத் தணுகியிட வன்போ டாருங்
காமிக்கு மோரைதன்னி னேரேழின் மிகக்கொடியோர் கலப்பவிந்தப்
பூமிக்கு ளுதித்தமைந்தன் பூமிப்பே றில்லாமற் போகு வானே.

(இ-ள்.) பூமித்தானாதிபதி சத்துருநீசக்ஷேத்திரத்திருக்க, வியயத்தானாதிபதியேனும் அட்டமத்தானாதிபதியேனும் தனத்தானத்திருக்க, இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும் குரூரக்கிரகங்களிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் பூஸ்திதியில்லாதவனேயாவன். எ-று.

பூமித்தானாதிபதி பெலகீனனாதலும், தனவிருத்தியின்றிப் பூமிப்பேறில்லாமையாற்றனத்தானத்தில் வியயத்தானாதிபதியேனும்,திரவியநாசத்தைக் குறிப்பிக்கும் அட்டமத் தானாதிபதியேனுமிருத்தலும், முறையே பொருள்வரவுஞ் சுகசந்தோஷமுமென்னுமிவற்றைக் குறிப்பிக்குந் தானங்களாகிய இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும் குரூரக்கிரகங்களிருத்தலும் பூஸ்திதியில்லாமையைக் குறிப்பித்தல் காண்க. "மிகக்கொடியோர்" என்றது சனி பாம்புகளையும் அங்காரகனையும். இதனாற் பூஸ்திதியில்லாமையைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினார்.()

தனம், பூஸ்திதி, வாகனம் முதலிய சுகமுள்ளவன்.

ஆட்சியதா யுச்சமதாய் நட்பாய்நா லினுக்கதிப னணுகி மேவ
மாட்சிமையுள் ளோரிவனை மகிழ்ச்சியுட னேகூடி மருவி னாலு [றல்
நீட்சியுற விருந்தநல்லோர் நோக்கிடினுந் தோன்றுகின்ற நீதித் தோன்
காட்சியுறு பொன்பூமிமுதற்பொருள்கைகூடிமனங்களித்துவாழ்வான்.

(இ-ள்.) நான்காதிபதி உச்ச சுவ மித்துரு க்ஷேத்திரத்திருக்க, சுபக்கிரகங்கள் அவனோடு சகிதமாய் வீற்றிருப்பினும், அன்றி அவ

னப்பார்ப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் பொன்னும் பூமியும் வாகனமு முதலிய செல்வங்களெல்லாம்பெற்று மனமகிழ்ந்து வாழ்வன். எ-று.

"மாட்சியையுள்ளோர்" என்றதனுற் சுபருள்ளும் மித்துருக்கள் என்பதும், "மகிழ்ச்சியுடனேகூடி மருவினுலும்" என்றதனுல் உச்ச சுவமித்திருக்ஷேத்திரத்தான பெலம்பெற்று என்பதும், "நீட்சியுறவிருந்தால்லோர்நோக்கிடினும்" என்றதனுல் திரிகோண கேந்திரலாபாதி சுகத்தானங்களில் உச்ச சுவ மித்துரு க்ஷேத்திரத்தான பெலமடைந்திருந்து பார்ப்பினும் என்பதும் யூகித்துணரப்படும். பொன்னும் பூமியும் வாகனமு முதலிய செல்வங்களைக் குறிப்பிக்குந்தானத்துக்கு அதிபதியாதலால் நான்காதிபதி பெலமடைதலும், சுபக்கிரகங்களின் சகிதமேனுந் திருஷ்டியேனும் பெறுதலும் தனம் பூஸ்திதி வாகனம் முதலிய சுகமுளவாதற்கேதுவாதல் காண்க. இதனுல் அவை உளவாதலைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (அ)

நான்காம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௪௯.

ஆறும்பாவம்.

சத்துருவுள்ளவன்.

பத்தினிலக் கினமதனி லேழி றுடையான் பயிலச் செவ்வாய்
சுத்தவிலக் கினமுறினு மாறுடையான் கேந்திரத்தே துலங்கியோரைக்
குப்த்துவிழி வைத்திடவா றினிற்பாப ரிருந்திடினு முதிச் சூளோற்கே
சத்துருக்கண் மிகவுளராந் தயங்குமணி வடந்தாளுந் தனத்தி னுளே.

(இ-ள்.) சத்துருத்தானுதிபதி பத்தாமிடத்திலேனும், இலக்கினத்திலேனும், ஏழாமிடத்திலேனும் வீற்றிருக்க, அங்காரகன் இலக்கினத்திலிருப்பினும், சத்துருத்தானுதிபதி கேந்திரபெலமுற்றிருந்து இலக்கினத்தைப் பார்க்க, சத்துருத்தானத்திற் குரூரக்கிரகங்களிருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகனுக்குச் சத்துருக்கண்மிகவும் உளராவர். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன சத்துரு, ரோகம், இருணம், சிறை, துக்கம், பந்துசனவிரோதம், திரவியநாசம், சீர்த்தி முதலியனவாம். இதனுல் சத்துருக்களுளராதலைக் குறிப்பிக்குங்கோணிலை கூறினர். ()

ஆறும்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௫௦.

ஏழாம் பாவம்.

விவாகமில்லாதவன்.

உன்னியவே ழினுக்கதிபன் சத்துருநீ சம்பாடா யுறினு மன்றேன்
மன்னியவா றதிபதியைக் கூடினும்பா பியர்நோக்கம் வைத்திட் டாலுந்
துன்னியவே ழினிற்பாப ரிருக்கவவர் விழிதொடினுந் துலங்கு கின்ற
மின்னியநுண் ணிடையாரை மணம்புரிந்து நலம்பருக விதியில்லானே.

(இ-ள்.) களத்திரத்தானுதிபதி சத்துருநீசக்ஷேத்திரத்திருப்பினும் பாடடையினும், அன்றிச் சத்துருத்தானுதிபதியோடுகூடி அங்ஙனமிருப்பினும், குரூரக்கிரகங்கள் அங்ஙனமிருக்கும் களத்திரத்தானுதிபதியைப் பார்ப்பினும், களத்திரத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்கக் களத்திரத்தானுதிபதி அக்குரூரக்கிரகங்களது திருஷ்டிபெறினும் அக்காலத்துப் பிறந்தமகன் மணம்புரிந்தின்பநுகரும் பேறில்லாதவனுவன். எ-று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: போகம், விவாகம், விவகாரம், பந்துசமூகம், இராஜசன்மானம், வியாபாரம், விவாகதினம், களத்திரநாசம், முதலியனவாம். ஒருவன்றனக்கில்லறநெறிக்குத் துணையாதற்குரிய களத்திரயோகம் உண்டோ இல்லையோ என்று நன்குயாராய்ந்து இல்லாதவழித் துறவறநெறியிற் புகவேண்டுதலின் "உன்னியவேழ்" என்று விதந்தார். இதுமுதலிரண்டுசெய்யுளால் விவாகமின்மையைக் குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (க)

வேறு.

இன்னுத பாபியர்கள் களத்திரத்தி னெய்திபிட
நன்னுத னூரூடப் பன்னிரண்டி னண்ணியிடத்
துன்னுத சத்துருநீ சம்பெறவே தோன்றுசுதன்
மின்னுரைக் கைப்பிடித்து வேட்டல்செய மாட்டானே.

(இ-ள்.) களத்திரத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, களத்திரத்தானுதிபதி சத்துருத்தானத்திலேனும் வியயத்தானத்திலேனும் சத்துரு நீசக்ஷேத்திரம்பெற்றிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் மணம்புரிந்தின்பநுகரும் பேறில்லாதவனுவன். எ-று.

"ஆரூடப்பன்னிரண்டில் சத்துருநீசம்பெற நண்ணியிட" எனவியையும். பெற்று பெற எனத்திரிந்துநின்றது. (உ)

ரோககளத்திரம்.

வேறு.

எண்ணியவே ழினுக்கதிபன் கொடியவர்க்கு
நடுவிருப்ப வேழிற் றீயோர்
நண்ணினும்பொ லாவசுர குலக்குரவன்
பொல்லார்த நடுவுற் றாலும்
கண்ணியவில் வுலகினிடை யுதித்தவிற
லாடவன்கைப் பற்றுங் காதற்
பெண்ணியனோ யுழக்குமன்றே லாவியுகும்
பிறங்குநடைக் கன்ன மன்னாய்.

(இ-ள்.) களத்திரத்தானதிபதி குரூரக்கிரகங்களுக்கு மத்தியில் வீற்றிருக்க, களத்திரத்தானத்திற் குரூரக்கிரகங்களிருப்பினும், களத்திரகாரகனாகிய சுக்கிரன் குரூரக்கிரகங்களுக்கு மத்தியிலிருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் பாணிக்கிரகணஞ்செய்துகொண்ட களத்திரம் நெடிதும் நோயினால் வருந்தும் அன்றி விரைந்து நசிக்கும். எ-று.

இதனால் ரோககளத்திரத்தைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர்.()

களத்திரநாசம்.

வேறு.

பயனாரு மேழதிப னாறெட்டுப் பன்னிரண்டில்
வயமான தற்றிருப்ப மழைக்கோளை மாபாபர்
வியமான வர்பார்க்க வுதித்துள்ளோன் மின்னனையாள்
கயரோகத் தனையலைப்பக் காலன்ற னூர்புகுமே.

(இ-ள்.) களத்திரத்தானதிபதி சட்டாட்டம வியயத்தானங்களிற் றன்வலியிழந்திருக்க, களத்திரகாரகனாகிய சுக்கிரனைக் குரூரக்கிரகங்களேனும் வியயத்தானதிபதியேனும் வியயத்தானத்திருக்குங் கிரகமேனும் பார்க்க அக்காலத்துப் பிறந்தவனுடைய களத்திரம் கயரோகத்தால் வருந்தியிறக்கும். எ-று.

இதுமுதன் மூன்றுசெய்யுளாற் களத்திரநாசத்தைக்குறிப்பிக்குங் கோணிலை கூறுகின்றார். (ச)

பனிதுற்றுங் கலைத்திங்கள் சலராசி பயின்றிருப்பச்
சனியூற்ற முடனெட்டிற் றங்கிடவே ழதனிடையே
துனிவாயத் தியருறத் தோன்றியவத் தோன்றலுடை
மனைவாழ்க்கைத் துணைவிகய ரோகத்தான் மாள்வாளே.

(இ-ள்.) சந்திரன் சலராசியில் வீற்றிருக்க, சனி அட்டமத்தானத்திற் பெலமுற்று வீற்றிருக்க, களத்திரத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க அக்காலத்துப்பிறந்த மகனுடைய களத்திரம் கயரோகத்தால் வருந்தியிறக்கும். எ-று. (ரு)

ஓரைதனிற் பன்னிரண்டி னோர்நான்கி னேழெட்டி
னாலுற வேழதிப னாறெட்டிற் பன்னிரண்டிற்
சேரவுல கத்தினிடைச் சேர்ந்தமகன் றான்யணந்த
தாரநெடும் பிணிபிடித்துச் சமனூரைச் சார்வாளே.

(இ-ள்.) அங்காரகன் இலக்கினத்திலேனும், சப்தமாட்டம வியயத்தானங்களிலேனும், நான்காமிடத்திலேனும் வீற்றிருக்க, களத்திரத்தானாதிபதி சட்டாட்டம வியயத்தானங்களிலிருக்க அக்காலத்துப் பிறந்த மகனது களத்திரம் தீர்க்கரோகத்தாற் பீடிக்கப்பட்டுயிர்துறக்கும். எ-று. (கூ)

பாக்கியகளத்திரம்.

பற்றுசுப ரேழுதய வாதிபதி தான்கேந்த்ர
முற்றதிரி கோணமத னுடனோட் பாட்சியுறின்
மற்றவ்வின் றேலதிபன் றூயரொடு வைகால்லோர்
சுற்றியெழப் பார்த்திடினத் தாரத்தாற் சூழ்திருவே.

(இ-ள்.) களத்திரத்தானத்திற் சுபக்கிரகங்களிருக்கச் சிவத்தானாதிபதி கேந்திரதிரிகோணத் தானங்களில் உச்ச சுவ மித்துருக்ஷேத்திரத்தான பெல்யடைந்திருப்பினும், அன்றிச் சீவத்தானாதிபதி சுபக்கிரகங்களோடு சகிதமாக, சுபக்கிரகங்கள் அவனைப்பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்த மகனுக்குக் களத்திரத்தாற் சகல பாக்கியமும் வந்து சேரும். எ-று.

சூழும் என்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. இதனாற் பாக்கியகளத்திரத்தைக் குறிப்பிக்குங் கோணிலைகூறினர். (எ)

ஏழாம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் சுஎ.

எட்டாம்பாவம்.

வாதரோகம்.

வேந்தனிரு நான்கிருப்ப வெய்யவர்கள் விழிவைக்கச்
சாந்தமுறு கலைத்திங்கள் சராசி தனினெய்தப்
போந்துலகி லுற்பவித்த புருடன்றான் வாதநோய்
தோய்ந்துகெடுந் தென்றிசையிற் றொல்பதியை யடைவானே.

(இ-ள்.) சீவக்கிரகமாகிய குரு மிருத்துத்தானத்திருக்க, குரூரக்கிரகங்கள் அக்குருவைப் பார்க்க, தேககாரகனாகிய சந்திரன் சரராசியில் வீற்றிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் வாதரோகத்தாற் பீடிக்கப்பட்டிறப்பன். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன: பிணி, மரணம், துக்கம், ஆயுள், இரணம், பகை, திரவியநாசம் முதலியனவாம். இதனால் வாதரோகத்தாற் பிடிக்கப்பட்டிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (க)

பிரமேக கயரோக வாதரோகங்கள்.

மழைக்கோளெட் டினிலிருப்ப மன்னுகொடுந் தீபனத்துப்
பிழைக்கோளங் கவன்றனைப் பெருநயனஞ் செய்திடினு
மிழைக்கோது நுண்ணிடையா யீண்டுதித்தோன் பிரமேகந்
தழைத்தான கயரோகம் வாதமுறச் சாவானே.

(இ-ள்.) சுக்கிரன் பிணி மரண துக்கத்தானமாகிய எட்டாமிடத்திலிருக்க, அங்காரகன் அச்சுக்கிரனோடு சகிதமானாலும் அன்றி அவனைப்பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தமகன் பிரமேகரோகம், கயரோகம், வாதரோகம் என்னுமிவற்றால் வருந்தியிறப்பன். எ-று.

நயனஞ்செய்திடினும் என்னும் உம்மை எச்சம். இதனாற் பிரமேக கயரோக வாதரோகங்களாற் பீடிக்கப்பட்டிறத்தலைக்குறிப்பிக்குங் கோணிலைகூறினார். (உ)

சலரோகம்.

குறைமதியெட் டுறைப்பாபர் சத்துருநீ சங்கொண்டே
கிறைவிழிவைப் பினுஞ்சாம னென்புலவ னெட்டதனி
னுறைதரத்தீ யோர்நோக்க முய்த்திடினு முதித்துள்ளோ
னறைதருநீள் சலரோக மடுத்தாவி யுகுவானே.

(இ-ள்.) கலைகுறைந்தசந்திரன் எட்டாமிடத்திருக்கக் குரூரக்கிரகங்கள் சத்துரு நீச க்ஷேத்திரத்திருந்து அவனைப் பெலமாகப் பார்ப்பினும், புதன் எட்டாமிடத்திருக்கக் குரூரக்கிரகங்கள் அவனைப்பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்த மகன் சலரோகத்தால் வருந்தியிறப்பன். எ-று.

இதனாற் சலரோகத்தால் வருந்தியிறத்தலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (௩)

எட்டாம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௪00.

ஒன்பதாம் பாவம்.

பிதிராரிட்டம்.

ஒன்பானுக் குடையவன்போய்ப் பாபருட னுறத்திய
ரொன்பான்மூன் ருறினுற வலாவிடினுன் றில்லாத
வொன்பான்பத் தினிற்பாப ருறத்தாதை மரிப்பானு
மொன்பானுஞ் செழுமணியி னொளிபழுக்குங் குழைபாளே.

(இ-ள்.) பிதிர்த்தானுதிபதி குரூரக்கிரகங்களோடு சகிதமாக, குரூரக்கிரகங்கள் பிதிர் சகோதர ரோகத்தானங்களிலேனும் மிருத்து த்தான பிதிர்த்தானங்களிலேனுமிருக்க அக்காலத்துப்பிறந்த மகனுக் குப் பிதா அரிஷ்டமாவன். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன: பிதா, தருமம், பாக்கியம், பிதிர்பர ம்பரை, உபதேசம், ஔஷதம் முதலியனவாம். "ஒன்றில்லாத" என் னுமடை பத்தோடுமியையும். இதுமுதலிரண்டுசெய்யுளாற் பிதிராரி ஷ்டத்தைக்குறிப்பிக்குங் கோணிலைகூறுகின்றார். (க)

ஐயமிலொன் பானுடையா னுறெட்டுப் பன்னிரண்டி
னெய்திவலி கெடினுமொன்பா னிரவிகுச னிருந்திடினுந்
துய்யவொன்பா னுதிபன்சத் துருநீசத் திடைதுலங்கக்
கையரொன்பா னோக்கிடினும் பிதாமரண மெனக்கரைவார்.

(இ-ள்.) பிதிர்த்தானுதிபதி துர்த்தானங்களிற் றன்பெலமிழந்திரு ப்பினும், பிதிர்த்தானத்திற் சூரியனுமங் காரகனும் விற்றிருப்பினும், பிதிர்த்தானுதிபதி சத்துருநீசமிக்ஷத்திரத்திருக்கப் பிதிர்த்தானத்தைக் குரூரக்கிரகங்கள் பார்ப்பினும் அக்காலத்துப்பிறந்தமகனுக்குப் பிதா அரிஷ்டமாவன். எ-று. (உ)

ஒன்பதாம்பாவம் முற்றிற்று.

ஆ. செய்யுள் கoஉ.

பத்தாம்பாவம்.

தொழிலற்றவன்.

வேறு.

பத்தினிற் பாப ரிருந்திடப் பத்தி
    னதிபனெட் டாறுபன் னிரண்டி
னெய்த்துட னிருப்ப வலதுசத் துருவாய்
    நீசமாய் மூடமா யெய்தச்
சித்தகன் கறியாப் பாபிய ரிவனைத்
    திகழிரு விழியினு னோக்கிற்
கைத்தொழில் புரியா துண்டியுண் டிருந்து
    காலத்தை வீணிலே கழிப்பான்.

(இ-ள்.) கன்மத்தானத்திற் குரூரக்கிரகங்களிருக்க, கன்மத்தானதிபதி துர்த்தானங்களிலேனும் சத்துரு நீச க்ஷேத்திரத்திலேனும் பெலமிழந்திருக்க, அன்றி மூடமடைய, குரூரக்கிரகங்கள் அவனைப்பார்ப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் கைத்தொழில் யாதேனுஞ் செய்யாதவனாய்ப் பரான்னமே புசித்துக்கொண்டிருந்து தனதுவாணாளை வீணாள்கழிப்பன். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன: கருமம், ஞானம், தெய்வபத்தி, சிவகாருண்ணியம், கீர்த்தி, சௌக்கியம், பிதா முதலியனவாம். இதனாற்றொழிலற்றவனைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (க)

இராஜமந்திரி, செல்வன், அஷ்டைசுவரியவான்.

எத்துபத் துடையா னுச்சமாய்க் கண்ட
    மெய்திடி னிராசமந் திரியாம்
வாய்த்தநட் பாட்சி யாகியே கேந்திர
    மருவிடின் வளார்பெருந் திருவா
னீத்தலிற் றாயர் பத்திடை நிற்கப்
    பத்துளோன் கேந்திர நிலைக்கக்
காத்திடு திரிகோ ணம்பெறி லட்டை
    சுவரிய னெனக் கணித்தார்.

(இ-ள்.) கன்மத்தானதிபதி கேந்திரம்பெற்று உச்ச க்ஷேத்திரத்திருப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் அரசனையடுத்து அவனுக்கு மந்திரியாவன்; கன்மத்தானதிபதி கேந்திரம்பெற்று சுவ மித்துரு க்ஷேத்திரத்திருப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் பெருஞ்செல்வனாவன்; கன்மத்தானத்திற் குருவொழித் தொழிந்த சுபக்கிரகங்களிருக்கக் கன்மத்

தானதிபதி கேந்திரமேனுந் திரிகோணமேனும் பெற்றிருப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் அஷ்டைசுவரியவானவன். எ-று.

"வில்" என்றது ஈண்டு ஆகுபெயராய் அதனதிபதியையுணர்த்திற்று; வில்நீத்த தூயர் என்று மாற்றிப்பொருளுரைக்க. காரகத்துவபங்கம் வருதலின் "நீத்தவில்" என்றார். கன்மத்தானதிபதியாயவழிக் காரகத்துவ பங்கமின்றென்பது "யோயோபாவஸ்வாமிதிருஷ்டோயுதோவா" என்பது முதலியவற்றானுணர்க. "நிலைக்க" செயின் என்னும் எச்சத்திரிபு. எண்ணும்மை விகாரத்தாற்றொக்கது. இதனால் இராஜமந்திரி, செல்வன், அஷ்டைசுவரியவானாதலைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினார். (உ)

சற்கன்மி, துர்க்கன்மி, வெகுபிரயோசனவான்.

நன்மைசேர் பத்தி னல்லவ ரிருக்க
நோக்கிட நற்றொழில் புரியு
மன்னிபர் பார்க்கப் பத்துளோ னீரா
றெட்டிலா றமிற் றுர்க்கன்மி
பன்னிய வாயத் ததிபதி யாமுச்
சம்பெற வோரையிற் பகரு
மின்னனை யாமீள நல்லவ ரிருப்பிற்
பார்த்திடின் வெகுபலன் மேவும்.

(இ-ள்.) கன்மத்தானத்திற் சுபக்கிரகங்களிருக்க அல்லது அதைப்பார்க்க அக்காலத்துப்பிறந்தமகன் சற்கன்மங்களையேசெய்வன்; கன்மத்தானத்தைக் குரூரக்கிரகங்கள் பார்க்கக் கன்மத்தானதிபதி துர்த்தானங்களிலிருப்பின் அக்காலத்துப்பிறந்தமகன் துர்க்கன்மங்களையே செய்பவனாவன்; லாபத்தானதிபதி உச்சக்ஷேத்திரத்திருப்ப இலக்கினத்திற் சுபக்கிரகங்களிருப்பினும் அன்றியதைப் பார்ப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் வெகுபிரயோசனங்களையடைவான். எ-று.

"நன்மைசேர் பத்து" என்று விதந்தமையால் இலக்கினத்திலிருந்து பத்தாமிடமும், சந்திரனிலிருந்து பத்தாமிடமும் கன்மத்தானமாமென்றும், அத்தானத்தையும் தானதிபதியையுங் கொண்டுமாத்திரமன்றி அத்தானதிபதியிருந்த நவாங்கிசாதிபனைக்கொண்டும் ஒருவனுடைய கன்மங் குறிப்பிக்கப்படுமென்றும் உணர்ந்துகொள்க. இதனாற் சற்கன்மி, துர்க்கன்மி, வெகுபிரயோசனவானாதலைக்குறிப்பிக்குங்கோணிலைகூறினார். (ந)

பத்தாம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் கoரு.

பதினோராம்பாவம்.

செல்வம், தனம், தானியம், பூஸ்தி
இவைகள் நாசமடைபவன்.

ஆயமே லாட்சி யுச்சமாங் கோட்க
ளமர்தர வதிபதி கேந்திரந்
தேய்விலாத் திரிகோ ணம்பெறின் மிக்க
செல்வவா னெனத் தெரிப்பார்
மேயபன் னிரண்டுக் கதிபன்கல் வியத்தின்
விளங்கிரண் டேழிடை மேவ
நேயமாய்ப் பிறந்தோன் றனிய நியதி
நீணிலம் பலபொரு ணாசம்.

(இ-ள்.) லாபத்தானாதிபதி லாபத்தானத்திருக்கக் குருக்கேந்திர திரிகோணம்பெற்றிருப்பினும், லாபத்தானத்தில் உச்சக்கிரகமிருக்க லாபத்தானாதிபதி கேந்திர திரிகோணம்பெற்றிருப்பினும் அக்காலத்துப்பிறந்தமகன் மிகுந்த செல்வனாவன்; விரயத்தானாதிபதி சீவத்தானத்திலேனும், தனத்தானத்திலேனும், சகலபோகத்தானத்திலேனும் வீற்றிருக்க அக்காலத்துப்பிறந்தமகன் தனம், தானியம், பூஸ்தி முதலிய செல்வமனைத்தும் நாசமடையப்பெறுவன். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன: லாபம், செல்வம், வித்தை, ஞானம், மனைவி, அடிமை, வாகனம் முதலியனவாம். "ஆயமேலாட்சி-திரிகோணம்பெறின்" என்றது இரண்டுயோகங்களாம். "அதிபதி" என்றது இரட்டுறமொழிதலால் முதல்யோகத்திற் குரு என்றும், இரண்டாம்யோகத்தில் லாபத்தானாதிபதி என்றும் பொருள்படுதல் காண்க. இதனாற் செல்வனாதலையும், தனம்முதலியன நாசமடையப்பெறுவோனாதலையுங் குறிப்பிக்குங் கோணிலை கூறினர். (க)

பதினோராம்பாவம் முற்றிற்று.

ஆ செய்யுள் கoசு.

பன்னிரண்டாம்பாவம்.

—

தனதானியம்பெற்று வாழ்பவன்.

பன்னுபன் னிரண்டுக் குடையவ னெட்டா
றதனிடைப் பயில்வுறி னலது
சொன்னவெட் டதிபன் பன்னிரண் டுறினும்
பன்னிரண் டாதிபன் றொடர்பிற்
பின்னமாய் நீசம் பகையிடை மருவ
வாறுளோன் பெருகுபன் னிரண்டிற்
றுன்னினுந் தனதா னியம்பல பெற்றுச்
சுகத்துட னிலத்திடை வாழ்வன்.

(இ-ள்.)வியயத்தானுதிபதி சட்டாட்டமங்களிலிருப்பினும், அன்றி அட்டமத்தானுதிபதி வியயத்தானத்திருப்பினும், வியயத்தானுதிபதி தனதுதொடர்பினுற் பெலமிழந்து சத்துரு நீச க்ஷேத்திரத்திருப்பச் சட்டமத்தானுதிபன் வியயத்தானத்திருப்பினும் அக்காலத்துப்பிறந்த மகன் தனதானிய முதலிய சம்பத்துக்களெல்லாம்பெற்றுச் சுகசீவியாவன். எ-று.

இப்பாவத்தாற்பெறப்படுவன: கஷ்டம், அதன்மம், சயனசௌக்கியம், தானம், தியாகம், யாகம் முதலியனவாம். இதனுற்றனதானியம்பெற்று வாழ்வோனைக் குறிப்பிக்குங் கோணிலை கூறினுர். (க)

துவாதசபாவங்கட்கும் புறனடை.

தூயசந் தான தீபிகை யதனிற்
சொல்லிய தீப்பல னெல்லா
மாயபொன் வெள்ளி வளர்கலைத் திங்க
ளழகுற நோக்கிடிற் றீருங்
காய்சினக் களிற்றின் கோடுபோ னிமிர்ந்து
கர்ப்புரச் செப்பெனப் பணைத்து
மேயதெள் ளமுத கலசத்தை வென்று
விளங்கிய கொங்கையி னுளே.

(இ-ள்.) காய் சின களிற்றின் கோடுபோல் நிமிர்ந்து கர்ப்புரச் செப்பு எனப் பணைத்து தெள் அமுதம் மேய கலசத்தை வென்று விளங்கிய கொங்கையாளே - கிளருகின்ற கோபத்தையுடைய யானையின் கோட்டைப்போல நிமிர்ந்து கர்ப்பூரச் சிமிழைப்போலப் பூரித்துத் தெளிந்தவமுதம்பொருந்திய கலசத்தையும் வெற்றிகொண்டு விளங்கிய ஸ்தனங்களையுடைய பெண்ணே,—தூய சந்தான தீபிகையில் சொல்லிய தீப்பலன் எல்லாம் - சுத்தமாகிய சந்தானதீபிகை

என்னுமிந்நூலில் (துவாதசபாவங்களுப்பற்றிச்) சொல்லிய (சுபாசுப பலன்களுள்) அசுபபலன்களெல்லாம்,—ஆய பொன் வெள்ளி வளர் கலைத் திங்கள் அழகு உற நோக்கிடின் தீரும் - சௌமியர்களாகிய குருவும், சுக்கிரனும், பூரணசந்திரனும் என்னுமிம்மூவரு ளொருவர் (உச்சசுவ மித்திரு க்ஷேத்திர ஸ்தானபெலமுதலிய பெலமுடையரா யிருந்து அவ்வசுபபலன்களைக் குறிப்பனவாகக் கருதப்படும் தானங்க ளையேனும், அத்தாநாதிபரையேனும், அக்காரகரையேனும்) அழகு பொருந்தத் திருஷ்டிசெய்யின் ஒழிந்துவிடும், எ-று.

ஆகவே சுபபலன்களைக் குறிப்பனவாகக் கருதப்படும் தானங்க ளையேனும் தாநாதிபர்களையேனும் காரகர்களையேனும் குரூரர்களாகிய அங்காரகனும், சனியும், பாம்பும் என்னுமிவர்களுள் ஒருவர் பெலமுற் றிருந்து திருஷ்டிசெய்யின் அச்சுபபலன்கள் ஒழிந்துவிடும் என்பதும் பெறப்படுதல் காண்க.

ஒருவனுக்குப் பூர்வகன்மாநுகுணமாகச் சனனகாலந்தொடங்கி மரணகாலம்வரையும் உளவாகும் சுகதுக்காநுபவங்களெல்லாம் இலக் கினமுதலிய துவாதசபாவங்களாலும் அறியப்படுவனவாதலால், அவ் விலக்கினமுதலிய காரகத்தானங்களும், அத்தாநாதிபர்களும், அத்தா னத்திருப்பவர்களும், அக்காரகர்களும் அடைந்திருக்கும் பெல துர்ப் பெலங்களைத் திருஷ்டி, சகிதம், அஷ்டகவர்க்கம், தசவர்க்கமுதலியவ ற்றானறிந்து அவற்றிற்கியைய அச்சுகதுக்காநுபவங்களை ஊகித்துணர் ந்து கொள்க. இதனாற் றுவாதசபாவங்களுக்குமாவதோர் புறனடை கூறினார். (உ)

பன்னிரண்டாம்பாவம் முற்றிற்று. 3916

ஆ செய்யுள் கoச.

சந்தான சரிதை.

இலக்கின நிருபணம்.

ஆதியாங் கிரேத யுகத்தினிற் கெர்ப்பா
தானமே யாதியா கவும்பின்
சோதியாத் திரேதத் தனிற்குறி கண்ட
தாதியா கவுத்துவா பரத்திற்
பேதியாச் சனன தோற்றமே யாதி
யாகவும் பெருங்கலி யுகத்தி
னீதியா மகவு பூமியிற் சனித்த
தாதியா கவுங்கொள னெறியே.

(இ-ள்.) ஆதியாம் கிரேதயுகத்தினில் - சதுர்யுகங்களுள் முதல் யுகமாகிய கிரேதாயுகத்தில்,—கெர்ப்பாதானமே ஆதியாகவும் - சிலகிரியையோடு கெர்ப்போற்பத்தியை உத்தேசித்துக்கொள்ளும் முகூர்த்தமே இலக்கினமாகவும்,—பின் சோதியாம் திரேதம் தனில் - அதற்குப்பின்னிகழும் பரிசுத்தயுகமாகிய திரேதாயுகத்தில்,—குறிகண்டது ஆதியாகவும் - பிரசவவேதனையுற்றுக் குறிகாணப்பட்ட அந்தநேரமே இலக்கினமாகவும்,—துவாபரத்தில் - அதற்குப்பின்னிகழுந் துவாபரயுகத்தில்,—பேதியாச் சனனதோற்றமே ஆதியாகவும் - மாறுபடாமற் சிசுவின் சனனத்தை வெளிப்படுத்துஞ் சிரசுதயமாகுங்காலமே இலக்கினமாகவும்,—பெருங் கலியுகத்தில் - அதற்குப்பின்னிகழுங் கடையுகமாகிய இப் பெரிய கலியுகத்தில்,—நீதியா மகவு பூமியில் சனித்தது ஆதியாகவும் - நீதியாகச் சிசுப் பூமியிற்பிரவேசஞ்செய்த அந்தநேரமே இலக்கினமாகவும்,—கொளல் நெறி - கொள்ளுதல் சாஸ்திரசித்தமாம். எ-று.

சிசுப் பூமியிற்பிரவேசமான கடிகையைச் சுவதேசகாலவளவை உள்ளபடி வரையறுத்துக் காட்டுங் கடிகாரம் வாயிலாகவேனும் பிற வழியாலேனும் மிக நுணுகி ஆராய்ந்தறிந்தவழியன்றி அச்சிசுவின் சுக துக்கா நுபவங்களை உள்ளபடியறிதல் கூடாதாகலானும், அக்கடிகையைப் பிறழ உணரின் அதை ஆதாரமாகக்கொண்டு ஆராயப்படும் சுகதுக்கா நுபவங்களும் பிறழும், அவை பிறழவே சோதிஷசாஸ்திரத்தில் விசுவாசம் இல்லாதொழியும், அஃதொழியவே சமயபத்தியுங் குன்றிவிடும் ஆகலானும் சிசுவின் சனனகடிகை மிக நுணுகி உள்ளபடி ஆராய்ந்தறியப்படற்பாலதென்றுணர்க.

இதனாற் சதுர்யுகங்களிலும் இலக்கினங் கொள்ளு முறையை நிருபித்தார்.

இன்னிலக்ந் சந்தானத்ததின்றியமையாமை.

உலகினில் வாழ்வு பூண்டுளோன் சகல
செல்வமு முற்றிருந் தாலு
மிலகிய மகவை யினிதினீன் றிடாதா
னிருமையின் பயன்பெறு னதனுற்
பலதவஞ் செய்து மகப்பெறல் வேண்டும்
பரவுகன் னியர்தமை வேட்ட
னிலவுசந் ததியின் பொருட்டலாற் காமப்
பொருட்டல வெனமறை நிகழ்த்தும்.

(இ-ள்.) உலகின் இல் வாழ்வு பூண்டுளோன் - (துறவறநெறியை அடையாது) உலகத்திற் பாரியோடுங்கூடிநடாத்தும் இல்வாழ்க்கை நிலையைப்பூண்டுகொண்டவன்,—சகலசெல்வமும்உற்று இருந்தாலும்-சகல ஐசுவரியத்தையும்பொருந்தியிருப்பினும்,—இலகிய மகவை இனிதின் ஈன்றிடாதான் - விளங்குகின்ற மக்களை இனிமையாகப் பெறாதவன்,—இருமையின் பயன்பெறான் - இம்மை மறுமை இரண்டின் பிரயோசனங்களையும் பெறமாட்டான்,—அதனல்(உம்)- ஆதலினுலும்,—பரவு கன்னியர்தமை வேட்டல் - துதிக்கப்படுகின்ற கன்னிகைகளைக் கல்யாணஞ் செய்தல்,—நிலவு சந்ததியின் பொருட்டு அலால் காமப் பொருட்டு அல என மறை நிகழ்த்தும் (அதனுல் உம்) - சற்புத்திரப்பேற்றின் பொருட்டேயன்றிக் காமநுகர்வின் பொருட்டன்றென்று வேதஞ் சொல்லும் ஆதலினுலும்,—பல தவம் செய்தும் மகப் பெறல் வேண்டும் - பலதவங்களைச் செய்தேனும் மக்களைப்பெற்றுக்கொள்ளல் வேண்டும். எ-று.

இதனுற் சந்தானத்ததின்றியமையாமை கூறினர். (உ)

புத்திர புத்திரிகளாலெய்தும் பயன்.

ஆதலா லுலகி லாண்மகப் பெற்று
லிருமைக்கும் பயனினி தளிக்குங்
காதல்கூர் கின்ற பெண்மக வாயி
னிம்மையிற் பயனிலை கருதிற்
றீதிலா விவாகஞ் செய்தளித் திடுகின்
மறுமையிற் றிகழ்பயன் சேரும்
பேதையர் தம்மைப் பெற்றன மென்று
பேதுறன் மிகப்பெரும் பிழையே.

(இ-ள்.) உலகில் ஆண்மகப் பெற்றால் இருமைக்கும் இனிது பயன் அளிக்கும் - இவ்வுலகத்தில் ஒருவன் புத்திரனைப் பெறுவானுயின்

(அப்புத்திரன்) இம்மை மறுமையிரண்டினும் (அவனுக்கு) நல்ல பயனைக் கொடுக்கும்,—காதல்கூர்கின்ற பெண் மகவு ஆயின் - ஆசையைத் தருகின்ற புத்திரியைப்பெறுவானாயின்,—கருதின் இம்மையில் பயன் இலை தீதிலா விவாகஞ் செய்து அளித்திடுகின் மறுமையில் திகழ் பயன் சேரும் - நினைக்குமிடத்து (அப்புத்திரியால் அவனுக்கு) இம்மையில் அடையப்படும் பயனில்லை; (ஒரு நன்மணவாளனுக்கு அப்புத்திரியை) விதிப்படி விவாகஞ்செய்து கொடுப்பின் மறுமையில் நல்ல பயன் வந்துசாரும்,—ஆதலால் பேதையர்தம்மைப் பெற்றனம் என்று பேதுறல் மிகப் பெரும் பிழை - ஆதலினாற் புத்திரிகளைப் பெற்றோமே என்று துன்புறுதல் மிகப் பெரிய குற்றமாகும். எ-று.

இதுமுதலிரண்டுசெய்யுளாற் புத்திர புத்திரிகளாலெய்தும் பயன் கூறுகின்றார். (ங)

துக்கமுற் றந்தப் பெண்சிறார் தமக்குஞ்
சூழுமக் கெர்ப்பங்க டமக்கும்
விக்கினஞ் செய்யி னளப்பிலாக் காலம்
வெய்யபாழ் நரகிடை விழ்வர்
தொக்கவித் தகையாற் சோடச மான
பெண்சிறார் வந்துதோன் றுகினு
மிக்கவு மனத்திற் களிப்புறல் வேண்டு
மென்னநால் வேதமும் விளம்பும்.

(இ-ள்.) துக்கமுற்று - கவலைகொண்டு,—அந்த பெண்சிறார் தமக்கும் சூழும் அக்கெர்ப்பங்கள் தமக்கும் விக்கினம் செய்யின் - அப்பெண்மக்களுக்கும் ஆராயப்படும் அப் பெண்கருப்பங்களுக்கும் தீங்கு செய்யின்,—அளப்பிலா காலம் வெய்ய பாழ் நரகிடை வீழ்வர் - (அத்தீங்கு செய்தார்) அளவில்லாதகாலங் கொடிய பாழாகிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்,—தொக்க இத் தகையால் - பொருந்தியவிந்நியாயத்தால்,—சோடசம் ஆன பெண்சிறார் வந்து தோன்றுகினும் மனத்தில் மிக்கவும் களிப்பு உறல் வேண்டும் என்ன நால்வேதமும் விளம்பும் - பல புத்திரிகள்வந்து பிறப்பினும் மனசில் மிகவும் மகிழ்ச்சி கொள்ளல்வேண்டும் என்று நான்கு வேதங்களுஞ் சொல்லும். எ-று.

ஒரு பெண் கெர்ப்பவதியென்றறியப்பட்டவுடன் அக்கெர்ப்பம் ஆணோ! பெண்ணோ! என்று பிரச்சினத்தாலேனும் குறிகளாலேனும் ஆராயப்படுதலின் "சூழுமக்கெர்ப்பம்" என்றார். விக்கினஞ்செய்தலாவது வதைத்தலுஞ் சிதைத்தலுமாம். சோடசம்-பதினாறு. ஈண்டுப் பல என்னும் பொருள்பட நின்றது. (ச)

புணர்ச்சிசெய்தற்கு நியதமாக விதித்த தினம்.

பாவையர் பூப்புற் றிரும்புன லாடு
 நாண்முதற் பன்னிரு நாளுந்
தாழ்விலாக் கெர்ப்போற் பத்தியா மதனிற்
 பரஸ்திரி களைத்தொட றவிர்ந்து
மேவிய விரவி னன்முகூர்த் தத்தின்
 வியன்கருப் புகுந்திடு மளவு
நாவலோர் சொன்ன நாடனிற் கூட
 னரர்புரி கடனென நவில்வார்.

(இ-ள்.) பாவையர் பூப்பு உற்று இரும்புனல் ஆடும் நாள் முதல் பன்னிரு நாளும் - ஸ்திரீகள் வீட்டுக்கு விலக்காயிருந்து பெரிய நீரின் முழுகும் நாளாகிய நான்காநாண்முதற் பன்னிரண்டு நாளிலும்,—தாழ்வு இலா கெர்ப்ப உற்பத்தி ஆம் - கெடுதலில்லாத கெர்ப்பத்தினுற்பத்தி உளதாகும்,—அதனில் - (ஆதலால்) அப்பன்னிரண்டு நாளிலும்,—பரஸ்திரிகளை தொடல் தவிர்ந்து - வேசிப்பெண்களைத் தழுவுதலொழிந்து,—நாவலோர் சொன்ன நாள்தனில் இரவில் மேவிய நல் முகூர்த்தத்தில் - சான்றோர் விதித்த தினத்தில் இராக்காலத்திற் பொருந்திய நல்ல முகூர்த்தத்தில், — வியன் கரு புகுந்திடும் அளவும் - மேலாகிய கருப்பம் உற்பத்தியாகும்வரையும்,—கூடல் - தங்கணாயகிகளோடு கலத்தல்,—நரர் புரி கடன் என நவில்வார் - இல்வாழ்வார் யாவருஞ் செய்யவேண்டிய கடனாகும் என்று தன்மசாஸ்திர நூலுடையார் சொல்வர். எ-று.

நன்முகூர்த்தம் என்றது சற்புத்திரோற்பத்திக்குரிய முகூர்த்தத்தை. இதனால் நாயகர் நாயகிகளை நியதமாகப் புணரவேண்டிய தினவரையறை கூறினர். (ரு)

நியதமாக விதித்ததினத்திற் புணராதொழியிற் படுந்துற்றமும், ஆண்பெண் உற்பத்தியாதற்குரிய தினவரையறையும்.

நண்ணுசூ தகமா யெறிபுனற் படிந்த
 நாண்முதற் பன்னிரு நாளு
மெண்ணிய கருப்ப மெய்திடு மளவும்
 பெண்ணினைக் கூடா திருப்பி
னண்ணிய கருப்ப மழித்தவர் புகுது
 நரகுறு மொற்றைநா ளணையிற்
பெண்ணுறு மிரட்டை யானநா ளணையிற்
 பிறங்குறப் பிறக்குமாண் மகவே.

(இ-ள்.) நண்ணு சூதகம் ஆய் எறிபுனல் படிந்த நாள்முதல் பன்னிரு நாளும் - (மாசந்தோறும்) உண்டாகும் பூப்புற்றுத் திரையெறியு

நீரில் (எண்ணெய் அரைப்பிட்டு) முழுகிய நான்முதற் பன்னிரண்டு நாளிலும்,—எண்ணிய கருப்பம் எய்திடும் அளவும் - விரும்பிய கருப்பம் உற்பத்தியாகும்வரையும்,—பெண்ணினை கூடிடாது இருப்பின் - நாயகன் தன்னாயகியை (விதித்தநாட்களிற்) புணராதொழிவனாயின்,—நண்ணிய கருப்பம் அழித்தவர் புகுதும் நரகுறும் - பொருந்திய கருப்பத்தைச் சிதைத்தவர்களடையும் நரகத்தை (அவன்) அடைவன்,—ஒற்றைநாள் அணையில் பெண் உறும் - (அவனை அப்பன்னிரண்டுநாளிலும்) ஒற்றையாகிய நாளிற் புணர்வனாயிற் புத்திரிகளே உற்பத்தியாவர்,—இரட்டை ஆன நாள் அணையில் ஆண்மகவே பிறங்குறப் பிறக்கும் - இரட்டையாகிய நாளிற் புணருவனாயின் (அவன் சந்ததி) விளங்கப் புத்திரரே உற்பத்தியாவர். எ-று.

இதனாற் புணர்ச்சிக்கு நியதமாக விதித்த தினத்திற் புணராதவழிப்படுங் குற்றமும், ஆண் பெண்மகவு உற்பத்தியாதற்கு யோக்கியமாகிய தினவரையறையுங் கூறினர். (சூ)

புணர்ச்சிசெய்தற்கு விலக்கிய பருவம்.

இருதுவா வதற்கு முன்னமுங் கெர்ப்ப
மெய்திய காலத்துஞ் சுதனைக்
கருதியின் றெடுத்து மாதசூ தகந்தான்
கலந்திடா திருக்குமப் போதும்
பெருவய தாகி மாதசூ தகம்போய்ப்
பெட்பறு காலத்து மகிழ்வா
யுருவுடை மாதர் தமையணைந் திடுகி
னலியுரு வெடுத்தலைந் துழல்வார்.

(இ-ள்.) உரு உடை மாதர்தமை - (நாயகர்) அழகுடைய தங்கணாயகிகளை,—இருது ஆவதற்கு முன்னமும் - இருதுவாவதற்கு முன்னும்,—கெர்ப்பம் எய்திய காலத்தும் - கெர்ப்பமடைந்திருக்குங் காலத்திலும்,—சுதனை கருதி ஈன்றெடுத்து மாதசூதகம் கலந்திடாதிருக்கும் அப்போதும் - புத்திரனை விரும்பிப் பெற்றெடுத்து மாதந்தோறுமுண்டாகும் பூப்புக் கலக்கப்பெறாதிருக்கும் அக்காலத்திலும்,—பெரு வயது ஆகி மாதசூதகம் போய் பெட்பு அறு காலத்தும் - பெரியவயது சென்று மாதவிடாய்நீங்கிக் (காமநுகர்வின்மேல்) ஆசையற்றிருக்கும் பருவத்திலும்,—மகிழ்வாய் அணைந்திடுகின் அலி உரு எடுத்து அலைந்து உழல்வார் - விரும்பித் தழுவுவாராயின் (அவர்கள் மறுசனனத்தில்) அலிவடிவெடுத்துப் பிறந்து (நல்வழிப்படாது) அலைந்து துன்புறுவர்கள். எ-று.

நாயகர் நாயகிகளை இருதுவாவதற்குமுன்னம் புணரின் இருவருந் தேகபெலங்குன்றி ரோகிகளாதலும், கெர்ப்பமெய்தியகாலத்துப் புணரின் அக்கெர்ப்பத்துக்குத் தீங்குநிகழ்தலும், சுதனையின்றெடுத்துமாத

சூதகங்கலந்திடாதிருக்கும்போது புணரின் சிசுவுக்குப் பால் குன்றுத லோடு அநேக ரோகங்கள் உளவாதலும், பெருவயதாகி மாதசூதகம் போய்ப் பெட்பறுகாலத்துப் புணரின் நாயகர்களுக்கு அநேக ரோகங்க ளுளவாதலோடு ஆயுள் க்ஷீணமாதலும் இம்மைப் பயனாகக் கொள்க. இதனாற் புணர்ச்சிசெய்தற்கு விலக்கிய பருவங்களைக் கூறினர். (எ)

புணர்ச்சிக்கு யோக்கியமாகாத் தினமும்,
செய்யத்தகாதனவும்.

பூத்தநா ளிற் புணருகிற் புருடன்
றன்னுடன் மனைவியும் பொற்பும்
வாய்த்தபுத் திரரு மரணமாய் நரகத்
தெய்துவ ராண்குறி மனைவி
பார்த்திடிற் புருட னவள்குறி நோக்கிற்
பாரியுண் டிடலவன் பார்க்கி
னீத்திடும் பகலிற் புணரினு யுளும்போம்
பாலரு நெறியிலா துதிப்பார்.

3716

(இ-ள்.) பூத்தநாள் நாலில் புணருகில் - பூப்புற்றநாண்முதனான்கு நாளினும் புணர்ச்சிசெய்யில்,—புருடன் உடன் மனைவியும் பொற்பும் வாய்த்த புத்திரரும் மரணமாய் நரகத்து எய்துவர் - நாயகனும் நாயகியும் (தங்கள்) அழகும், (தமக்கு) வாய்த்த புத்திரரும் நாசமதாகத் தாமும் நரகத்தையடைந்துவருந்துவர்,—மனைவி ஆண்குறி பார்த்திடில் - நாயகி நாயகனது குறியைப்பார்ப்பினும்,—புருடன் அவள்குறி நோக்கில் - நாயகன் நாயகியினதுகுறியைப் பார்ப்பினும்,—பாரி உண்டிடல் அவன் பார்க்கில் - நாயகி போசனஞ்செய்தலை நாயகன் பார்ப்பினும்,—நீத்திடும் பகலில் புணரின் - விலக்கப்பட்ட பகற்காலத்தில் (அவர்கள்) புணர்ச்சிசெய்யினும்,—ஆயுளும் போய் பாலரும் நெறி இலாது உதிப்பார் - (இருவருக்கும்) ஆயுசும் க்ஷீணமாகப் புத்திரரும் நெறியற்றவர்களாய்ப் பிறப்பார்கள். எ-று.

"மிகத்தெளிந்தாரோதி விதிநிசித்தமெல்லாம் பகற்பொழுதுபாரார்பகம்" என்று மறைஞானசம்பந்தநாயனர் அருளிச்செய்த திருவாக்கால் ஆண்குறிமனைவிபார்த்திடற்கும், புருடனவள்குறிநோக்கற்கும் பகற்காலமே விலக்கப்பட்டதென்றுணர்க. இதனாற் புணர்ச்சிக்கு யோக்கியமாகாத் தினமும் செய்யத்தகாதனவுங் கூறினர். (அ)

புணர்ச்சிசெய்தற்கு விலக்கிய திதிமுதலியன.

தையலே முதலாந் திதிதனிற் கூடி
லன்பறுஞ் சட்டியே விரோதம்
பொய்யி லட்டமிநோய் நவமியிற் றுக்கம்
பொருந்துமே காதசி பாப

மையறு தூய துவாதசி தன்னின்
மருவிடிற் பூமியின் மருவான்
மெய்யினோர் புகழுஞ் சதுர்த்தசி தன்னின்
மேவிடி னோயென விதிப்பார்.

(இ-ள்.) தையலே முதலாந் திதிதனில் கூடில் அன்பு அறும் - புருஷன் றனதுநாயகியைப் பிரதமையிற் புணர்வனாயின் (அவர்களிடத்தன்னியோன்னியமாயுள்ள) அன்பு நீங்கிவிடும்,—சட்டி(யில் கூடில்) விரோதம்-சட்டியிற் புணர்வனாயின், (இருவருக்கும்) விரோதமுண்டாகும்,—பொய்யில் அட்டமி(யில்) கூடில் நோய் - பொய்ம்மையில்லாத அட்டமியிற் புணரில் (இருவருக்கும்) நோயுண்டாகும், — நவமியில் கூடில் துக்கம் - நவமியிற் புணரில் (இருவருக்கும்) துக்கமுண்டாகும், —பொருந்தும் ஏகாதசி (யில் கூடில்) பாபம் - பொருந்திய ஏகாதசியிற் புணரில் (இருவருக்கும்) பாபமாகும்,—மை அறு தூய துவாதசி தன்னில் மருவிடில் பூமியில் மருவான் - குற்றமில்லாத சுத்தமாகிய துவாதசியிற் புணர்வனாயின் (அவன்) பூமியிலிருந்து வாழப்பெறுன், —மெய்யினோர் புகழும் சதுர்த்தசி தன்னில் மேவிடில் நோய் என விதிப்பார் - பெரியோர்புகழுஞ் சதுர்த்தசியிற் புணர்வனாயின் (இருவருக்கும்) நோய் உண்டாகுமென்று நூலோர் சொல்வர். எ-று.

எனவே ஒழிந்த திதிகள் புணர்ச்சிக்குரியன என்பதும் பெறப்படும். இதுமுதலிரண்டுசெய்யுளாற் புணர்ச்சிக்கு விலக்கிய திதிமுதலிய காலங்களைக் கூறுகின்றார். (கூ)

ஈருவா மாதப் பிறப்பினின் மகத்தி
னேயுஞா யிற்றினிற் சூசி
சார்தரு நாளி லாதிரை யெனுநாட்
கர்ப்பநாண் மூன்றிற் சந்திரன்போ
யோரைக்கா மெட்டிற் புகுதுநாள் வியதீ
பாதநாள் விரதநா ளுவந்து
பேருறு பிதிரர்க் கூட்டுநாட் புணரின்
வயதறும் வறுமைநோய் பிடிக்கும்.

(இ-ள்.) ஈர் உவா (இல்)- அமாவாசை பௌர்ணிமைகளிலும்,—மாதப் பிறப்பினில் - சங்கிரமதினங்களிலும்,—மகத்தின் - மகநக்ஷத்திரத்திலும்,—* ஏயும் ஞாயிற்றினில் சூசி சார்தரும் நாளில் - இயைந்த ஞாயிற்றிற் சூசிசாருந் தினத்திலும்,—ஆதிரை எனும் நாள் (இல்) - திருவாதிரையென்னும் நக்ஷத்திரத்திலும்,— கர்ப்பநாள் மூன்றில் - சன்மத்திரய நக்ஷத்திரங்களிலும், — சந்திரன் போய் ஓரைக்கு ஆம் எட்டில் புகுது நாள் (இல்)-சந்திரன் லக்கினத்துக்கு (சந்திரலக்கினம்) எட்டாம் இராசியிற் புகுந்திருக்கும்நாளாகிய அட்டமராசி நக்ஷத்திரங்களிலும்,—வியதீபாத நாள் (இல்) - வியதீபாதயோகதினத்திலும்,—

* இதற்கு யதார்த்தமான பொருள் புலப்படவில்லை.

விரத நாள் (இல்) - (தான் அனுஷ்டிக்கும் சுக்கிரவாரவிரதம், கிருத்திகாவிரதம் முதலிய) விரததினங்களிலும்,—பேர் உற்று பிதிரர்க்கு உவந்து ஊட்டுநாள் (இல்) - இறந்துபோன தனது பிதா மாதா முதலிய பிதிரர்களுக்கு மகிழ்ந்து ஊட்டும் தினமாகிய சிராத்த தினத்திலும்,—புணரில் - (ஒருவன் றனது நாயகியைப்) புணருவனாயின், — வயது அறும் - (அவனுக்கு) ஆயுசுக் குன்றும்,—வறுமை நோய் பிடிக்கும் - அவனைத் தாரித்திரியமும் நோயும் சார்ந்து வருத்தும். எ-று. (கo)

சூதகாசௌச தோஷமில்லாத காலம்.

சேயிழை நாபிச் சேதனம் பண்ணிச்
 செழும்புன லாட்டுதன் முன்னு
மாய்தரும் பிரேதத் தனைக்குளிப் பாட்டி
 வைத்தலங் கரிப்பதன் முன்னு
மாயிழை மடவார் பூப்புரி நான்கு
 தினமகன் றரும்புன லதனிற்
றோயல்செய் ததற்பி னுதிரநீர் படினுஞ்
 சூதக மில்லையென் றுரைப்பார்.

(இ-ள்.) நாபிச்சேதனம் பண்ணி சேயிழை செழும்புனல் ஆட்டுதல் முன்னும் - சிசுவுக்குக் கொப்பூழ்க்கொடியறுத்துச் செப்பமாகிய ஆபரணங்களையணிந்த தாயைச் செழுமையாகிய நீரின் மூழ்குவித்தற்கு முன்னரும்,—மாய்தரும் பிரேதத்தனை குளிப்பாட்டி வைத்து அலங்கரிப்பதன் முன்னும் - உயிர்நீங்கிய பிரேதத்தை அபிஷேகஞ்செய்துவைத்து (ஆடையாபரணாதிகளால்) அலங்காரஞ்செய்தற்கு முன்னரும்,—ஆய் இழை மடவார் பூப்புரி நான்குதினம் அகன்று அரும்புனல் அதனில் தோயல் செய்ததற்பின் உதிரநீர் படினும் - ஆராயப்பட்டவாபரணங்களையணிந்த ஸ்திரீகள் பூப்புற்று விலக்காயிருந்த நான்குதினமும் நீங்கி (ஐந்தாந் தினத்தில்) அரியநீரில் (எண்ணெயரைப்பிட்டு) முழுகியபின் சூதகநீர் உண்டாயினும்,—சூதகம் இல்லை என்று உரைப்பார் - சூதகாசௌசங்களில்லையென்று அறிஞர்கள் சொல்வர். எ-று.

இதனாற் சூதகாசௌச தோஷமில்லாத காலங் கூறினார். (கக)

நாயகன் மலடனாயவழியும் நாயகி மலடியாயவழியும் செயற்பாலது.

பற்று சாதகத் திலங்கிலக் கினத்திற்
 றன்மனை மலடெனப் படுகின்
மற்றொரு விவாகம் புத்திரோற் பத்திக்
 கேதுவாய் வருத்திடல் வழக்கா

அ

மிற்றதா மலடன் யானென வுணரிற்
றன்குலத் தொருவனை யெய்திச்
சொற்றரு மனைவி யுடன்முயங் குவித்துப்
புதல்வரைத் தொழுதலே தொன் னெறியே.

(இ-ள்.) பற்று சாதகத்து இலங்கு இலக்கினத்தில் தன்மனை (ஏ) மலடு எனப்படுகின்,—சனனகாலத்தெழுதிய தனது சாதகத்தில் விளங்கும் இலக்கினபாவமுதலிய பாவங்களாற் றனதுமனைவியே மலடாந் தன்மையுடையள் எனக் காணப்படின்,—புத்திர உற்பத்திக்கு ஏதுவாய் மற்று ஒரு விவாகம் வருத்திடல் வழக்கு ஆம் - புத்திரர்பிறத்தற் கநுகூலமாகப் பிறிதொருகன்னிகையை விவாகஞ்செய்தலை வருவித்துக்கொள்ளுதல் சான்றோர்வழக்காம்,—அது இற்று - மனைவி மலடாந் தன்மையுடையளாயபொழுது செயற்பாலதிது,—ஆ யான் (ஏ) மலடன் என உணரின் - ஆகா! நானே மலடாந்தன்மையுடையேன் என்று (சாதகத்தாலறியின்),—தன் குலத்து ஒருவனை எய்தி - தன் குலத்திற்பிறந்த (தனதுஞாதியில்) ஒருவனைச்சார்ந்து (அவனுக்குத் தனது அபிப்பிராயத்தைச் சொல்லி),—சொல் தரும் மனைவியுடன் முயங்குவித்து - தன்சொற்கடவாத (தனது) தருமபத்தினியோடு (அவனைத்) தழுவுவித்து,—புதல்வரைத் தொழுதல் தொல் நெறியே - புத்திரரைப்பெற்று வணங்குதல் தொன்றுதொட்ட வழக்கேயாம். எ-று.

இதனால் நாயகன் மலடனுயவழியும், நாயகி மலடியாயவழியுஞ் செய்யுமுபாயங் கூறினர். (கஉ)

மனுதருமசாஸ்திரமுதலிய கலைகளைக்கற்றமுறை.

அருடருந் தூய நன்மனு நீதி
சோதிடம் புரோகித மழகார்
புருடலக் கணஞ்சீர் வைத்திய முற்றுங்
கற்றிடான் புலவனென் றிடுகின்
மருடரும் பிரமக் கொலைபுரி தோட
மாகும்வெம் பவமுறு மதனுற்
றெருடர முழுது மீதெலாந் தெரியக்
கற்றிடல் புலமையோர் திறனே.

(இ-ள்.) அருள் தரும் தூய நல் மனுநீதி - கிருபையைத்தருகின்ற சுத்தமாகிய நல்ல மனுவின் தருமசாஸ்திரமும்,—சோதிடம் - சோதிட சாஸ்திரமும்,—புரோகிதம் - ஆசாரியத்துவத்துக்குரிய சமயசாஸ்திரமும்,—அழகு ஆர் புருடலக்கணம் - அழகுநிறைந்த சாமுத்திரிகாலக்ஷண நூலும்,—சீர் வைத்தியம் - சிறந்த வைத்தியசாஸ்திரமும் (என்னுமிக்கலைகளை),—முற்றும் கற்றிடான் புலவன் என்றிடுகின் - முற்றுங் (குருமுகமாகக்) கற்றறியாதவன் நான் அவற்றிற் புலமையுடையேன்

என்று சொல்லுகில் (அது),—மருள்தரும் பிரமக் கொலைப்புரி தோடம ஆகும்-மயக்கத்தைத்தருகின்ற பிரமகத்தி தோஷத்துக்சொப்பாகும்,—வெம் பவம் உறும் - (அன்றி அவனுக்குக்) கொடிய சனனமும் வந்து சாரும்,—அதனால் - ஆதலினால்,—ஈது எலாம் முழுதும் தெருள்தர தெரிய கற்றிடல் புலமையோர் திறன் - இக்கலைகளையெல்லாம் பூரணஞானமுண்டாகும்படி ஐயந்திரிபற விளங்கிக் கற்றுக்கொள்ளல் வித்துவான்களுக்குக் கடனாகும். எ-று. (கங)

நூல்செய்தகாலம்.

வே று.

சகவரு - மீரெண்ணூற் றெண்ணான்கு மிரண்டுஞ்
சரிந்ததற்பின் பொருந்திடுநந் தனவருட மதனின்
மிகவருடந் திடுமகரத் திங்கடனில் விளங்கி
வியப்புறுமூன் றாந்திகதி வியாழன்பூ சத்திற்
செகமருவு சந்தான தீபிகையைத் தமிழிற்
செய்யுணூற் றிருபானாய்ச் சேர்த்துலகில் விளம்பு
மிகபரம்வேண் டினர்நாளும் படித்துணர்வார் கேட்பா
ரெனுமாசை தனைமனங்கொண் டிதனையியற் றினனே.

(இ-ள்.) சகவருடம் ஈர் எண்ணூற்று எண்ணான்கும் இரண்டும் சரிந்ததற்பின் பொருந்திடு நந்தனவருடம் அதனில் - சாலிவாகனசகாப்தம் ஆயிரத்தறுநூற்று முப்பத்துநான்கின்மேனிகழ்ந்த நந்தனவருஷத்தில்,—மிக அருள் தந்திடும் மகரத்திங்கள் தனில் விளங்கி வியப்பு உறு மூன்றாம் திகதி வியாழன் பூசத்தில் -(தேவர்களுடைய) கிருபையை மிகவுந்தருகின்ற தைமாசத்தில் விளங்கி வியக்கப்படும் மூன்றாந் திகதி குருவாரமும் பூசநக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில்,—உலகில் விளம்பும் இகபரம் வேண்டினர் நாளும் படித்து உணர்வார் கேட்பார் எனும் ஆசைதனை மனம்கொண்டு - இவ்வுலகத்திற் சொல்லப்படும் இம்மை மறுமையிரண்டையும் விரும்புவோர் எந்நாளும் வாசித்து விளங்குவார்கள் (அன்றி அவர்களிடங்) கேட்பார்கள் என்னும் ஆசையை மனதிற்கொண்டு,—செகம் மருவு சந்தானதீபிகையை தமிழ்ச்செய்யுள் நூற்றிருபான் ஆய் சேர்த்து இதனை இயற்றினன் - சான்றோர்களால் அங்கீகரிக்கப்பட்ட வடமொழிச் சந்தானதீபிகையைத் தமிழில் மொழிபெயர்த்து நூற்றிருபது செய்யுளாக்கிச் (சந்தானதீபிகை என்றே பெயர்கொடுத்து) இந்நூலைச் செய்து முடித்தேன். எ-று. (கச)

சந்தானதீபிகை மூலமும் உரையும்

முற்றிற்று.

ஆ செய்யுள் கஉஉ.

பிழைதிருத்தம்.

பக்க.	வரி.	பிழை.	திருத்தம்.	தள்ளல்.
௨	௭	சுவிகாரபுத்திரர்	சுத்தபுத்திரர்	
௩	௨௮	ளீச	நீச	
௫	௨௫	ஞேக்க	நோக்க	
௬	௭	சட்டாட்ட	சட்டாட்டம இப்பிழைகள் வருமிடங்களினெல்லாம் இங்ஙனந் திருத்திக்கொள்க.	
,,	௧௨	சோப	சோக	
௭	௨௮	சன	சனி	
௧௬	௧௩	சபதாற்	சபத்தாற்	
,,	௧௫	சபதத்தால்	சாபத்தால்	
,,	௨௰	சபதால்	சபத்தால்	
௧௮	௨௧	நசிக்கும்	நசியும்	
,,	௨௩	மாதலும்	மாதலாலும்	
௧௯	௨௫	யாய்ப்பிணி	யாய்பிணி	
,,	௨௮			இடுகிடையாய்
,,	௩௪			இடுகிடை வழக்கச் சொல்.
௨௨	௪	வசூரி	மசூரி பின்வருவனவும் அன்ன	
௨௫	௭	தாரித்திரியத்துவம்	தாரித்திரிய	
௩௬	௨	மாதிராரிஷ்டம்	மாதிரரிஷ்டம்	
,,	௧௭	கிரகம்,	கிருகம்,	
,,	௨௧	மாதிராரிஷ்டம்	மாதிரரிஷ்டம்	
௩௭	௨௮	கிரக	கிருக	
,,	௩௩	கிரக	கிருக	
,,	௩௬	கிரக	கிருக	
௩௮	௨	கிரக	கிருக	
,,	௭	கிரக	கிருக	
,,	௧௧	கிரக	கிருக	
,,	௧௨	கிரக	கிருக	
௩௯	௧௰	யூகித்து	ஊகித்து	
௫௩	௨௨	நாடையார்	நாலுடையார்	

௨-ம் பக்கம் "நோயுமாரணமும்" என்னுஞ் செய்யுளில் நோயும், மாரணமும், கிருநோக்கும் என்பவற்றிற்கு முறையே நோயும், மரணமும், கிரகதிருஷ்டியும் என்று பொருளுரைத்துக் கொள்க.

உ

சிவமயம்.

யாழ்ப்பாணம் கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

விக்கிரய புத்தக விஞ்ஞாபநம்.

[தபாற்செலவு வேறே.] ரூபா. சதம்.

சாதகசோதிமாலை.— இது சோதிடர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு சோதிடஸ்கந்தங்கள் மூன்றனுட் பின்னையவாகிய சங்கிதா ஸ்கந்தத்தையும் சாதகஸ்கந்தத்தையும் தொகைவகைவிரியிற் செந்தமிழ் நடையிற் போசராசபண்டிதராற் செய்யப்பட்டது ... ... 0. எரு

சந்தானதீபிகை:—ஸ்ரீமத். இராமலிங்கமுனிவரால் மொழிபெயர்க்கப்பட்ட இச்சோதிடநூல் பொழிப்புரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது. இது சந்தானபலனைச் சுருக்கியும் விளக்கியும்காட்டுதலின் யாவர்க்கும் பயன்படத்தக்கது... ... ... 0. ருo

பராகிநம்.—சாதகாதிகட்கு உபயோகமாயுள்ள கிரகஸ்புடங்களை விளக்கிக் காட்டுவது. ... ... 0. உரு

நகுலமலைக் குறவஞ்சி நாடகம்.— யாழ்ப்பாணத்திலே வாசஞ்செய்த பிரபுக்கள், பிராமணகுருமார், காட்டுக்கோட்டை நகரத்தார முதலியோர்களையும், அங்கங்குள்ள ஊர்கள், தடாகங்கள் முதலியவைகளையும், இடையிடையே வர்ணித்தும், மடக்கு, யமகம், சிலேடை, தொனி முதலிய அலங்காரங்கள் அமைத்தும் நகுலமலைமீதும், மாவைக் கந்தசுவாமிமீதுமாகச் செந்தமிழிற்செய்யப்பட்டது. 0. கo

நடாமணி நிகண்டு இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி.— சொற்பொருளோடு... ... ... 0. கo

நுந்திநுடி.வெண்பா.—இது ஔவையாரருளிச்செய்த ஆத்திசூடியிலுள்ள "அறஞ்செயவிரும்பு" முதலிய சூத்திரங்களை முறையே இறுதியிலடக்கி வெண்பாயாப்பிலுற் செய்யப்பட்டது. ஒவ்வொரு வெண்பாவிற்கும் ஒவ்வொரு கதை எழுதப்பட்டிருக்கின்றது... ... 0. உரு

ஈச்சுரநிச்சயம்.—இது பூர்வத்தும் தற்காலத்தும் தலையெடுத்துள்ளனவாகிய உலோகாயதம, பௌதிகவாதம், சந்தேகவாதம்முதலிய நிரீச்சுரவாதக் கொள்கைகளைக் கண்டித்து கடவுணிச்சயத்தைத் தெள்ளிதிற்காட்டி ஐந்து சூத்திரவடிவாய் வசனநடையில் இயற்றப்பட்டது. ... ... க. 00

தத்துவப்பிரகாசம்.—இதிலே சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதங்களையும் தனித்தனி நானகுநான்கு பாதங்களாக விரித்துக்கூறப்படும். சைவசமயவுண்மை இவ்வொரு நூலிலே மிக இலகுவாக அறிந்துகொள்ளலாம். ... ... உ. 00

நீதிநெறிவிளக்கம்.—இது இப்போது விசேஷமான உரையுடன் அச்சிடப்பட்டு வருகின்றது.